முச்சந்தி முரளி



Registered as a Newspaper

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 157

புதன்கிழமை
01 மே 2024

சித்திரை 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

புதன்பொய்கை




## 13 ஆவது திருத்தமே தமிழருக்குத் தீர்வாம்

### எரிக்சொல்ஹெய்ம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 1
தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு 13 ஆவது திருத்தமே தீர்வாக அமையும். அது விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என்று நோர்வேயின் இலங்கைக்கான முன்னாள் தூதுவரும், புலிகளுடன் பேச்சுகளில் ஈடுபட்ட

08

# பொதுவேட்பாளரை நிறுத்துவது நிச்சயம்!

### தாயக சிவில் சமூகத்தினர் கூட்டாக நேற்றுத் தீர்மானம்

வவுனியா, மே 1
ஜனாதிபதித் தேர்தலில் பரந்துபட்ட பேச்சுகள் மற்றும் நடவடிக்கைகளின் அடிப்படையில் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என சிவில் சமூகத்தினர் கூட்டாகத் தீர்மானித்துள்ளனர்.

08

## பொதுவேட்பாளர் தெரிவில் ஓரணியில் செயற்படுங்கள்!

### காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளும் வலியுறுத்து!

கிளிநொச்சி, மே 1
ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை நியமிப்பதற்கு எல்லோரும் ஒற்றுமையாகவும், ஏகமனதாகவும் சரியான தீர்மானங்களை மேற்கொள்ளவேண்டும் என்று காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்

08

## ஆயுதங்கள் தேடியோருக்கு ஏமாற்றமே எஞ்சியது!

யாழ்ப்பாணம், மே 1
யாழ்ப்பாணம் - காரைநகர்ப் பகுதியில், ஆயுதங்களைத் தேடி விசேட அதிரடிப் படையினரால் நேற்று முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப் பணிகள் ஏமாற்றத்தில் முடிந்தன.
காரைநகர், வலந்தலை சந்திக்கு அரு

08

## புங்குடுதீவு எலும்புக்கூடு; நாளை அகழ்வுப்பணி!

யாழ்ப்பாணம், மே 1
புங்குடுதீவில் மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்ட பகுதியில் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிமுதல் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தில் மருத்துவமனைக்கு அண்மையாக

08

## யாழ். நகரில் 5 பவுண் நகை திருட்டு

யாழ்ப்பாணம், மே. 1
யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து ஐந்து பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.
ஜன்னல் கம்பியைக் கழற்றிவிட்டு, அதன் வழியாக உள்நுழைந்த திருடர்கள் இந்தத் திருட்டில் ஈடுபட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணப் பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-26)

## வெற்றுக்காணிக்குள் மூன்று வாள்கள் மீட்பு!

யாழ்ப்பாணம், மே 1
உரும்பிராயில் வெற்றுக் காணிக்குள்ளிலிருந்து மூன்று வாள்கள் மீட்கப்பட்டுள்ளன.
கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைவாகவே, உரும்பிராய் அன்னங்கை வீதியில் அமைந்துள்ள வெற்றுக் காணிக்குள்ளிருந்து இரண்டு

08

## வடக்கு – கிழக்கில் இன்று தமிழ்த்தேசிய மே தினம்!

யாழ்ப்பாணம், மே 1
வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழ்த்தேசிய மேதின எழுச்சிநாள் நிகழ்வுகள் இன்று முன்னெடுக்கப்படவுள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.
வடக்கு மாகாணம் தழுவிய தமிழ்த் தேசிய மே தின எழுச்சிநாள் நிகழ்வு கிளிநொச்சி மத்திய

08



### நாட்டில் முதன்முறையாக

## யாழ். மாவட்டத்தில் உணவுப்பாதுகாப்பு!

யாழ்ப்பாணம், மே 1
யாழ்ப்பாணம் மாவட்டத்தில், உணவுப் பாதுகாப்புத் திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

08

## தொழிலாளர் உரிமைகள் நிலைநாட்டப்படவில்லை!

### வடமாகாண சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் கவலை

யாழ்ப்பாணம், மே 1
மே தினங்கள் கடந்து செல்லுகின்ற பொழுதிலும் தொழிலாளர்களுக்கான உரிமைகள் இன்னமும் நிலைநாட்டப்படவில்லை என்று வடமாகாண சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.
வடமாகாண சுத்திகரிப்பு

08

### ஆபத்தான போக்குவரத்து

## மூன்று பேருந்துகளின் வழித்தட அனுமதி ரத்து!

வவுனியா, மே 1
வவுனியாவில் ஆபத்தான போக்குவரத்தில் ஈடுபட்டமை, விபத்துகளை ஏற்படுத்தியமை உள்ளிட்ட குற்றங்களுக்காக மூன்று தனியார் பேருந்துகளின் வழித்தட அனுமதி இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கை - யானை இணைப்பு திட்டம் எதுவும் இல்லை!

## சந்திரிகா தெரிவிப்பு



**கொழும்பு, மே 1**

**சுதந்திரக் கட்சியை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைப்பதற்கு எந்த வகையிலும் முயற்சிக்க வில்லை. இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

சுதந்திரக்கட்சி இன்று பூஜ்ஜிய நிலைக்கு வந்துள்ளது. கட்சி பல கூறுகளாக பிளவுபட்டுள்ளது. கட்சியை மீளக் கட்டியெழுப்புவ தென்பது இலகுவான விடயமாக அமையாது. அவ்வாறான முயற்சி எடுக்கப்பட்டால் அதற்கு ஒத்துழைப்பு வழங்க தயார். கிராம மட்டத்திலான மக் கள் சுதந்திரக் கட்சியுடன் உள்ளனர். புதிய நபர்களு டன் சுதந்திரக்கட்சியை கட்டியெ ழுப்ப முடியும் என நம்புகின்றேன். எனது மகன் அரசியலுக்கு வர மாட்டார்.

60 வயது கடந்ததும் செயற்பாட்டு அரசியலில் இருந்து ஒதுங்கு வேன் எனக் கூறினேன். அவ் வாறு செய்தேன். கட்சிகள் மற்றும் அமைப்புகள் விடுத்த கோரிக்கை யின் பிரகாரமே 2015 இல் பொது வேட்பாளர் முயற்சிக்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டது. சுதந்திரக் கட்சியை ஐக்கிய தேசியக் கட்சியு டன் இணைக்கும் திட்டம் எதுவும் இல்லை, - என்றார். (ஒ-44)

## அநுர – சஜித் விவாதம் ஆதரவளிக்க மறுக்கும் சட்டத்தரணிகள் சங்கம்

கொழும்பு, மே 1

எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவுக்குமான விவாதத்துக்கு ஆதரவ ளிக்கப் போவதில்லையென இலங்கை சட்டத்தர ணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

சங்கத்தின் பொதுக்குழு கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இரு வேட்பாளர்களுக்கிடையில் மாத்திரம் விவாதம் நடத்துவது சிக்கலான விடயம் என இலங்கை சட் டத்தரணிகள் சங்கம் என்றும் குறிப்பிட்டுளளது.

இதேவேளை இந்த விவாதத்துக்கான சரியான திகதியொன்று இதுவரை இரு தரப்பினராலும் அறிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக் கது. (ச-இ)

## ரணிலை இரகசியமாக சந்தித்த மைத்திரிபால

கொழும்பு, மே 1

இலங்கையில் கடும் அரசியல் நெருக்கடி களையும், வழக்குகளையும் எதிர்கொண் டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன, சில நாளகளுக்கு முன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேரில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார் என்று தகவல் வெியாகியுள்ளது.

தனது சொந்தத் தேவைக்காக ஜனாதிபதி யைச் சந்தித்துள்ள அவர், அதன்போது சமகால அரசியல் நிலைவரம் குறித்தும் பேசியுள்ளார் என்று தெற்கு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இதனை அவரால் கட்சியில் இருந்து நீக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அம்பலப் படுத்தியுள்ளனர் என்று அந்தச் செய்தி யில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-இ)

## யாழ்ப்பாணத்தில் ஐக்கிய மக்கள் கட்சி

யாழ்ப்பாணம், மே 1

ஐக்கிய மக்கள் கட்சி எனும் புதிய கட்சி யாழ்ப்பாணத்தில் நேற் றுமுதல் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக அந்தக் கட்சியின் உபதலைவர் அப்பையா இராஜவேந்தன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

புலம்பெயர் தேசத்தில் வசிக்கும் புலேந்திரன் என்பவரை தலை வராக கொண்டு கடந்த 2021ஆம் ஆண்டு முதல் நாம் வெகு ஜன அமைப்பாக செயற்பட்டு வருகின்றோம். எமது சேவை களை ஐக்கிய மக்கள் கட்சி என்ற பெயரில் இன்றிலிருந்து தொடர்ந்து முன்னெடுக்கவுள்ளோம். எமது மக்களுக்கு தேவை யான அனைத்து விடயங்களையும் இலங்கையின் அரசமைப் புக்கு உட்பட்டு செயற்பட இருக்கின்றோம்.

தற்பொழுது எமக்கு தேர்தல் நோக்கமில்லை. இது குறித்து தேர் தல் காலத்திலேயே இறுதி முடிவை எடுப்போம். தமிழ் இனத்தின் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவர்களுக்கு சேவையாற் றுவது எமது நோக்கமாகும்- என்றார். (ஒ-125)

## ம.உ. ஆணைக்குழு அலுவலகம் மாற்றம்

யாழ்ப்பாணம், மே 1

இல.1, 3ஆம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நீண்ட காலமாக இயங்கி வந்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்ப்பாண அலுவலகம் இன்றுமு தல் இல. 42 கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு இடமாற்றம் செய்யப்படுகிறது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வின் யாழ்ப்பாண பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

புதிய அலுவலகமானது பிதான வீதியிலிருந்து கோவில் வீதியில் 150 மீற்றர் தூரத்திலும், மருத் துவமனை வீதியிலிருந்து பிரதான வீதியை நோக்கிய கோவில் வீதியில் 50 மீற்றர் தூரத்தி லும் அமைந்துள்ளது என அவர் மேலும் தெரி வித்தார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தில் சேவைகளை பெறுவதற்காக மக்கள், மேற்படி முகவரியில் இருக்கும் புதிய அலுவலகத்தை நாட முடியும் என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ-27)

## கடலுணவுகளின் விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மே 1

யாழ். குடாநாட்டில் கடலுணவுகளின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது என்று நுகர்வோரால் தெரிவிக்கப்ப டுகிறது.

பாஷையூர், குருநகர், நாவாந்துறை, கல்வியங்காடு உள்ளிட்ட மீன்சந்தை களில் கடலுணவுகளின் வரத்து குறைந்து காணப்படுவதோடு அவற் றின் விலையும் உயர்வடைந்துள் ளது.

அதேவேளை யாழ். குடாநாடு மற்றும் வடமராட்சி, தீவுப் பகுதி கடற்பகுதியில் கடலுணவுகளின் பிடிபாடும் குறைவா கவே காணப்படுகிறது என்று மீனவர் கள் தெரிவித்துள்ளனர்.

சந்தைகளில் இறால் கிலோ 1800 ரூபாவாகவும் கணவாய் கிலோ 2000 ஆயிரம் ரூபாவாகவும் மீன் கிலோ 1500 ரூபாவாகவும் திருக்கை கிலோ 1200 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. (ச-17)

## வெளியேறும் நிலையில் மும்பை



லக்னோ, மே 1

ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத் தில், லக்னோவிடம் தோல் வியடைந்தது மும்பை. இதையடுத்து தொடரில் இருந்து வெளியேறும் நிலைக்கு மும்பை தள் ளப்பட்டுள்ளது.

முதலில் துடுப்பெடுத் தாடிய மும்பை அணிக்கு, ஆரம்ப வீர ரான ரோகித் 4 ஓட்டங்களு டன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். தொடர்ந் துவந்த சூரியகுமார் யாதவ் 10, திலக் வர்மா 7, ஹார்திக் பாண்டியா 0 என அடுத்தடுத்து பவிலியன் திரும்பினார் கள். பவர்பிளே முடிவதற்குள் மும்பை அணி 4 விக்கெட்களை இழந்து பரி தவித்தது. இஷான் கிஷான் மற்றும் வெதேரா இருவரும் சற்று நிதானமாக ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். கொஞ் சம்கொஞ்சமாக மும்பை மீட்சியடைய ஆரம்பித்தது. இவர்கள் இருவரும் இணைப் பாட்டமாக 50 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் இஷான் கிஷான். வெதேரா 46 ஓட்டங்களுடன் ஆட் டமிழந்தார். ரிம் டேவிட் கடைசிக்கட்ட அதிர டியைக் கையிலெடுத்து 18 பந்துகளில் 35 ஓட்டங்களைக் குவிக்க மும்பை அணி 7 விக்கெட்களை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குக் களமிறங்கிய லக்னோ அணிக்கு குல்கர்னி ஓட்டமெதையும் பெறாது ஆட்ட மிழந்தார். அணித்தலைவர் ராகுல், ஸ்ரொய் னிஸ் இருவரும் இணைந்து அணியை வெற்றிப்பாதையை நோக்கி அழைத்துச் சென்றனர். 28 ஓட்டங்களுடன் ராகுல் ஆட் டமிழந்தாலும், ஸ்ரொய்னிஸ் அரைச்சதம் கடந்து பலம் சேர்த்தார். 62 ஓட்டங்களுடன் ஸ்ரொய்னிஸ் ஆட்டமிழந்தாலும் பதற்றம் இல்லாது வெற்றிபெற்றது லக்னோ. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தைக்கு முன்பாக வீதியோர வியாபாரம்

## கல்வியங்காடு சந்தை வியாபாரிகள் எதிர்ப்பு

**யாழ்ப்பாணம், மே 1**

**வீதியோரத்தில் காணப்படுகின்ற மரக்கறி வியாபாரிகளையும், வியாபார நிலையங்களையும் அகற்றுமாறு கோரி கல்வியங்காட்டு மரக்கறி சந்தை வியாபாரிகள் நேற்றுமுன்தினம் காலை முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.**

யாழ். மாநகரசபையின் ஆளுகைக்குட்பட்ட கல்வியங்காடு செங்குந்தா பொதுச் சந்தையில் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்ற மரக்கறிச் சந்தை வியாபாரிகள் கருத்துத் தெரிவிக்கையில்,

நாம் சந்தை குத்தகைப் பணத்தையும் மாநகர சபைக்குச் செலுத்திவருகின்றோம். கொரோனாத் தொற்று ஏற்பட்ட காலத்திலிருந்து எமது சந்தைக்கு எதிரே உள்ள வீதியோரத்தில் தனியார் ஒருவர் மரக்கறிச் சந்தையை நடத்தி வருகின்றார். இது குறித்து நாம் யாழ். மாநகரசபைக்கு அறிவித்திருந்தோம். மாநகரசபை அந்தப் பகுதி நல்லூர்ப் பிரதேச சபைக்கு உரிய இடம் எனத் தெரிவித்தது. நல்லூர்ப்பிரதேச சபைக்கும் முறையிட்டோம். இதற்கு பொலிஸாரிடம் முறையிடுமாறும் கோரப்பட்டது. பொலிஸாரிடமும் முறையிட்டோம். மாநகரசபையால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு தண்டப்பணம் விதிக்கப்பட்ட பொழுதிலும் அவர்கள் மேன்முறையீடு செய்து தற்பொழுதும் கடையை நடத்தி வருகின்றார்கள். எமது சந்தையை நோக்கி வருகை தருகின்ற நுகர்வோர் குறித்த வீதியோரக் கடையை நோக்கி அழைக்கப்படுகின்றார்கள்.

எனவே அதுவரை ஒரு வார காலத்துக்கு எமது சந்தைச் செயற்பாடுகளைப் புறக்கணிக்கவுள்ளோம் - என்றனர். (ஒ-125)

# குழந்தையை கொன்ற தாய் கைது

கொழும்பு, மே 1

9 மாதக் குழந்தையை கிணற்றில்வீசிகொலை செய்த குற்றச்சாட்டில் தாயொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா இராகம பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய பெண்ணே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குடும்பத்தகராறுகாரணமாக குழந்தையை வீட்டுக்கருகிலுள்ள கிணற்றில் தாய் வீசியதாக விசாரணையில் தெரியவருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-555)



மே தின நிகழ்வுகள்

# களமிறக்கப்படும் 9,000பொலிஸார்

மே முதலாம் திகதி நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டங்கள் மற்றும் மே தினக் கூட்டங்களுக்காக நாடளாவிய ரீதியில் 9 ஆயிரத்துக்கும் அதிகமான பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அதேவேளை தேவைப்படின் இராணுவமும் வரவழைக்கப்படும் என்றும் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (ச)

# மருத்துவ பீடத்துக்கு எதிர்ப்பு

கொழும்பு, மே 1

கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடத்தை ஆரம்பிக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளை நிறுத்தக் கோரி சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் மாணவர்கள் தீப்பந்தங்களை ஏந்தித் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். (எ-இ)



# மாணவருக்கு வத்தகப்பழம்

யாழ்ப்பாணம், மே 1

யாழ். குடாநாட்டில் நிலவி வரும் கடும் வெப்பமான காலநிலையையடுத்து பாடசாலை மாணவர்களுக்கு வத்தகப்பழம் வழங்கப்பட்டு வருகின்றது.

பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கே வெப்பத்தைதணிக்கும் முகமாக அவை வழங்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-17)

# ஈஸ்டர் தாக்குதல் பாதிப்பு: 223 குடும்பங்களுக்கு வீடு

கொழும்பு, மே 1

ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட 223 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

223 குடும்பங்களுக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்காக அரசாங்கம் 139 மில்லியன் ரூபாவைச் செலவிட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

# நிழற்குடை அமைக்குக

சாவகச்சேரி, மே 1

மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் கோவிலுக்கு அருகில் பயணிகள் நிழற்குடை அமைக்கவேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதனால் மழை, வெயில் காலங்களில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்றும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (ச-9)

# தினம் தெரியுமோ?

கெடுகுடி சொற்கேளாதெண்டுவினம். உந்த டிப்பர்க்காரரும் என்னதான் சொன்னாலும் ஒண்டையும் காதில போடவே மாட்டினம். டிப்பர் மாதிரி கனரக வாகனங்கள் எல்லாம் 40 கிலோமீற்றர் வேகத்துக்கு மேல ஓடவேகூடாது. அதுதான் சட்டம். ஆனால் இஞ்ச குச்சொழுங்கைகளுக்கைகூட, 80 கிலோமீற்றர் வேகத்துக்குக் குறையாமல்தான் டிப்பர் எல்லாம் பறக்குது. எவ்வளவு வேளைக்கு லோட்டை கொண்டு போய்ப் பறிக்கமுடியுமோ அவ்வளவுக்கு ஆதாயம் அவைக்கு. அப்பதானே இன்னும் நாலைஞ்சு லோட்டை ஏத்தலாம். மணலுக்கு ஒரு ரூட் பெர்மிட் எடுத்தால் அதைவைச்சே நாலைஞ்சு லோட் மணலை ஒருநாளுக்குள்ள ஓடித் தள்ளிடுவினம். அதால உந்தளவு வேகம்.

டிப்பர்களின்ர வேகத்தைவிட இன்னொரு விசயமும் இருக்கு. எல்லா றோட்டிலையும் டிப்பர்கள் ஓடஏலாது. ஆனால் எங்கும் செல்வோம் எதையும் இடிப்போம் எண்ட கணக்கில டிப்பர்கள் இல்லாத றோட்டையே இப்ப பாக்க ஏலாது. யாழ்ப்பாணத்தில இருந்து பூநகரி போற றோட்டும், பூநகரியில இருந்து பரந்தன் போற றோட்டும் கன இடங்களில பள்ளம் திட்டியா மாறினதுக்கு காரணமே டிப்பர்கள்தான். எந்தப் பக்கத்தால டிப்பர்கள் மணலை ஏத்திக்கொண்டு வருகுதோ அந்தப் பக்கமாத்தான் காப்பெற் றோட், கிழிஞ்சு போய் பல்லை இளிச்சுக் கொண்டு நிக்குது. அதைமாதிரி வடமராட்சி கிழக்கிலையும் காப்பெற்றோட் போட்டு நாலைஞ்சு மாதத்திலேயே அது நாசமாப் போனதுக்கும் டிப்பர்கள் தான் காரணம். அந்த றோட்டுகளைத் தரமில்லாமல் போட்டதும் காரணமா இருந்தாலும்கூட, டிப்பர்கள் இப்பிடி அறம்புறமா அந்த றோட்டுகளில ஓடித் திரியாட்டி இன்னும் கொஞ்சக்காலத்துக்குப் பிறகுதான் அதுகள் அலங்கோலமாகியிருக்கும்.

இப்பிடி எல்லா இடத்தையும் நாசமாக்கிறதும், போற வாறவையை அடிச்சு இயமனுக்கு பரிசாக் குடுக்கிறதையுமே தொழிலா வைச்சிருக்கிற உந்தடிப்பர்கள், இப்ப பள்ளிக்கூடப் பிள்ளையள் போற நேரத்தில, பள்ளிக்கூடங்கள் இருக்கிற றோட்டுகளிலையும் கண்டபடி ஓடத்தொடங்கி இருக்கினம். இத்தனைக்கும் அந்தப் பள்ளிக்கூடங்கள் தொடங்கமுதல் போக்குவரத்தை ஒழுங்குபண்ண பொலிஸ்காரரும் நிக்கிறவை. அவையைக்கூட மதிக்காமல் இந்த டிப்பர்கள் தங்கட இஷ்டப்படி ஒயிலோடு உறவாடி பிள்ளையளின்ர உயிரோட விளையாடுற வேலையைத் தொடங்கியிருக்கினம். சும்மா போய்வாற சனத்தையே பந்தாடுற டிப்பர்களுக்கு பள்ளிக்கூடப் பிள்ளையள் கிடைச்சா...? நினைக்கவே பயமாக் கிடக்கு. பொலிஸ்காரர் பள்ளிக்கூட நேரத்திலையாவது உந்த டிப்பர்களுக்கு ஒரு கால்கட்டு போடமாட்டினமோ?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதைத் தொகுதி அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 1

மூத்த முற்போக்கு எழுத்தாளரும், ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளருமான மு.அநாதரட்சகனின், 'பின் தொடரும் வலி' எனும் சிறுகதைத் தொகுதி அறிமுக நிகழ்வு, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர்கூடத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

'தாயகம்' சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் க. தணிகாசலம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்திவேல், ஓய்வுநிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி. முத்துலிங்கம், மூத்த எழுத்தாளர் சாகித்யரத்னா ஐ. சாந்தன், ஆசிரியரும் எழுத்தாளருமான ஸ்ரீலேக்கா பேரின்பகுமார், தர்க்கா நகர் கல்வியியற் கல்லூரியின் ஓய்வு நிலை விரிவுரையாளர் கலாநிதி ந. இரவீந்திரன், நூலாசிரியர் மு. அநாதரட்சகன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப)

# மரக்கறிகளின் விலை திடீர் சரிவு



யாழ்ப்பாணம், மே 1

யாழ்.குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலையில் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

மரக்கறி வகைகள் கூடுதலாக சந்தைகளுக்கு வந்து சேர்வதால் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்றைய நிலைவரத்தின்படி, கத்தரிக்காய் கிலோ 90 ரூபாவாகவும் பயிற்றங்காய் கிலோ 160 ரூபாவாகவும் பாகற்காய் கிலோ 300 ரூபாவாகவும் தக்காளிப்பழம் கிலோ 80 ரூபாவாகவும் பூசணிக்காய் கிலோ 60 ரூபாவாகவும் வெண்டிக்காய் கிலோ 80 ரூபாவாகவும் கரட் கிலோ 200 ரூபாவாகவும் கோவா கிலோ 100 ரூபாவாகவும் பச்சை மிளகாய் கிலோ 70 ரூபாவாகவும் சின்னவெங்காயம் கிலோ 220 ரூபாவாகவும் கீரை ஒரு பிடி 80 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டன. (ச-17)

# குருப்பெயர்ச்சி பரிகார யாகம்

மாந்தை, மே 1

குருப்பெயர்ச்சி பரிகார யாகம், பாணலிங்கேஸ்வரம் அருள்மிகு நர்மதா நதீஸ்வரர் ஆலயத்தில் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ப)

# மின்னல் தாக்கி சகோதரர்கள் பலி

கொழும்பு, மே 1

இரத்தோட்டை வெல்காலயாய பிரதேசத்தில் மின்னல் தாக்கத்துக்குள்ளாகி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரனும் சகோதரியும் உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. 12 வயதுச் சிறுமியும் 23 வயதுடைய இளைஞனுமே இவ்வாறு மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# டுபாயில் அமையவுள்ள பெரிய விமானநிலையம்

டுபாய், மே 1

உலகிலேயே மிகப்பெரிய விமானநிலையத்தை டுபாயில் அமைப்பதற்கு டுபாய் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

128 பில்லியன் டுபாய் நாணய (3,48,49,820 டொலர் ) செலவில் 70 சதுர கிலோமீற்றர் சுற்றளவில் இந்த விமானநிலையம் அமைக்கப்படவுள்ளது.

வருடாந்தம் 260 மில்லியன் பயணிகள் இந்த விமானநிலையத்தினூடாகப் பயணம் செய்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐந்து சமாந்தர ஓடுபாதைகளையும், ஐந்து வாசல்களையும், 400 விமானங்கள் தரித்து நிற்கக்கூடிய வசதியையும் இந்த விமானநிலையம் கொண்டிருக்கும். 40 வருடங்களில் இதன் கட்டுமானப்பணிகள் பூர்த்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-6)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கக்கூடும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். புதிய முயற்சிகள் மேற்கொள்வதைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சகோதரர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். முயற்சிகள் சாதகமாக முடியும். செலவுகள் அதிகரிக்கும். சமாளித்துவிட முடியும்.

**மிதுனம்:** அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தாய்வழியில் சில பிரச்சினைகள் ஏற்படக் கூடும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்லவும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**கடகம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். உற்சாகமாகக் காணப்படுவீர்கள். வியாபாரம் எப்போதும்போல் நடைபெறும். விநாயகரை வழிபடுவது நன்று.

**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். உடல்நலனில் கவனம் தேவை.

**கன்னி:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். எதிரிகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். வியாபாரம் வழக்கம்போலவே இருக்கும்.

**துலாம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.இலாபம் கிடைப்பது மகிழ்ச்சி தரும். தட்சிணாமூர்த்தி வழிபாடு நன்று.

**விருச்சிகம் :** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு வருத்தம் தரும். அலைச்சல் ஏற்படும். சில சங்கடங்கள் ஏற்படும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**தனுசு:** மகிழ்ச்சி தரும் நாள். ஏற்பட்டிருந்த மனவருத்தம் நீங்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். வீண்செலவுகள் ஏற்படும். முடிவு ஒன்றைத் துணிச்சலுடன் எடுப்பீர்கள். உடல் நலனில் கவனம் தேவை.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடமுடியும். உறவுகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கும். செலவு செய்ய நேரிடும்.

**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். மனக்கசப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. அனுசரணையாக நடந்து கொள்ள முயற்சி செய்யவும். சில பிரச்சினைகள் ஏற்படும்.

**மீனம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். அனுசரித்துச் செல்வது நல்லது. தாயின் தேவையை நிறைவேற்ற சிறிது அலைய வேண்டியிருக்கும். மற்றவர்களுடன் வீண் சர்ச்சைகளில் ஈடுபடவேண்டாம்.

# பொருளாதார நெருக்கடியால் உழைக்கும் வர்க்கத்துக்கு பாதிப்பு

யாழ்ப்பாணம், நாட்டின் ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் மலைபோன்று வளர்ந்துள்ள பொருளாதார நெருக்கடிகளால் அன்றாட உணவுத் தேவைகளைப் பூத்தி செய்ய இயலாது ஒருநேர உணவுடனும், பட்டினியுடனும் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் எனப் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலர் சி.கா.செந்திவேல் கவலை வெளியிட்டுள்ளார்.

மே தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த மூன்றாண்டுகளில் அத்தியாவசியப்பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன. மின்சாரக் கட்டணம் மீண்டும் மீண்டும் உயர்த்தப்பட்டு இதுவரை பத்து லட்சம் பாவனையாளர்கள் மின் இணைப்பை இழந்துள்ளனர். அதேபோன்று போக்குவரத்து உள்ளிட்ட சேவைத்துறைக் கட்டணங்கள் மிகமோசமாக அதிகரிக்கப்பட்டன. வற் வரி உள்ளிட்ட நேரடி மறைமுக வரிகள் மக்கள் மீது திணிக்கப்பட்டன.

அரசாங்க ஊழியர்கள் அற்ப சம்பள உயர்வுடன் ஏமாற்றப்பட்டுள்ளனர். தனியார் துறையினர் முற்றாகவே கைவிடப்பட்டுள்ளனர். மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளம் இரண்டாயிரம் ரூபா வழங்கவேண்டும் எனும் கோரிக்கை முதலாளியக் கம்பனிகளால் மறுக்கப்படுகிறது. கல்வித்துறை சீரழிக்கப்பட்டு தனியார் மயமாக்கப்படுகிறது. பாடசாலைகளில் மாணவர்களின் கல்விச் செலவு அதிகரித்துப் பெற்றோரால் தாங்கிக் கொள்ள இயலாது தடுமாறுகின்றனர். சுகாதாரத் துறை சிதைக்கப்பட்டு அரச மருத்துவமனைகளில் நோயாளர்கள் பெருகுவதுடன் மருந்துகள் பெறமுடியாத அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். நாட்டின் சனத்தொகையில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் பெண்கள். அவ்வாறிருந்தும் அவர்கள் கடும் உழைப்புச் சுரண்டலுக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறார்கள். அத்துடன் பால்நிலைத் தாழ்வுகளுக்கும், பாலியல் துன்புறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர்.

மேற்கூறிய சமூக ஏற்றத் தாழ்வுகளையும், அநீதிகளையும் மக்கள் மத்தியிலிருந்து மறைக்கவும், திசை திருப்பவும் சிங்கள - பௌத்த பேரினவாதம் தூண்டிவிடப்படுகிறது. இவை அனைத்துக்கும் பின்னால் நவகொலனிய அடிவருடிகளான ஆளும் மேட்டுக்குடி உயர் வர்க்க ஆட்சியினரே இருந்து வருகின்றனர். இவர்களையே இன்றைய ரணில் ராஜபக்ச ஆட்சியினர் பிரதிநிதித்துவம் செய்து நிற்கின்றனர்.

இத்தகையோர் தான் தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ்த் தேசிய இனங்களினதும், ஏனைய சிறுபான்மையினரதும் இனத்துவ உரிமைகளை மறுத்து அதிகாரப் பரவலாக்கத்தையும், சுயாட்சிக் கோரிக்கைகளையும் நிராகரித்து வருகிறார்கள் - என்றுள்ளது. (ஒ-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவைச் சாடிக்கொண்டிருப்பதால் ஈழத்தமிழர்களுக்கு எதுவும் கிடைக்காது

## அரசறிவியல்துறைத் தலைவர் ஆலோசனை

**யாழ்ப்பாணம், மே 1**

**இந்தியா முதுகில் குத்தி விட்டது. காட்டிக் கொடுத்துவிட்டது. இந்தியர்கள் எங்களை முன்னேறவே விடமாட்டார்கள் என எத்தனை விவாதங்களை முன்வைத்தாலும் இந்தியா இல்லாமல் ஈழத்தமிழர்களோ அல்லது இலங்கைத் தீவில் வாழும் வேறெந்தவொரு இனமோ தங்கள் இருப்பை நிர்ணயமாகத் தக்க வைக்க முடியாது, ஒழுங்குபடுத்த முடியாது என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல்துறைத் தலைவர் கே.ரி.கணேசலிங்கம் வலியுறுத்தியுள்ளார்.**

தமிழரசுக் கட்சியின் நிறுவுநர் தந்தை செல்வாவின் 47ஆவது ஆண்டு நினைவேந்தலும், நினைவுப் பேருரையும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை யாழ். நகரில் அமைந்துள்ள தந்தை செல்வா நினைவிட வளாகத்தில் கடைப்பிடிக்கப்பட்ட போது கலந்து கொண்டு நினைவுப் பேருரை ஆற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

எத்தனை ஆயிரம் போராளிகள், 24இற்கும் மேற்பட்ட கப்பல்கள், எத்தனை ஆட்லறிகள்?, எத்தனை தற்கொலைப் படைதாரிகள்? இவையெல்லாம் முன்னர் விடுதலைப் புலிகளிடமிருந்தன. தற்போது இவற்றுள் ஈழத்தமிழர்களிடம் இருப்பது என்ன? எதுவுமே இல்லை.

ஈழத்தமிழர்கள் ஆயுதப் போராட்டத்தில் பின்னடைவைச் சந்திப்பதற்கான அடிப்படை தமிழ்நாடு ஸ்ரீபெரும்புதூரில் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட சம்பவத்திலிருந்து தொடங்கியது. இதனை யார் செய்தார்கள்? என்பதில் நிறையக் குழப்பங்களும், விவாதங்களும் உண்டு. வெளிப்படையாக இல்லாவிட்டாலும் கூட மறைமுகமாகவேனும் இந்தச் சம்பவம் ஈழத்தமிழர்களால் செய்யப்பட்டதென்ற விவாதம் இந்திய தேசம் முழுவதும், உலகம் முழுவதும் உண்டு. ஆகவே, இது சரிப்படுத்தப்பட வேண்டும்.

ஈழத்தமிழர்கள் ஒரு கட்சியாக, ஒரு தேசமாகத் தங்கள் இருப்பின் நியாயத் தன்மைகளை முதன்மைப்படுத்திக் கொண்டு செயற்பட வேண்டிய மிகப் பிரதானமான தேசம் இந்தியா. தமிழகத்தில் காணப்படும் அரசியல் வடிவம் எப்படி வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும். எனினும், ஈழத்தமிழர்களுக்கு மிகப் பலம் தமிழகம்.

ஒரு தடவை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் மீது இந்திய மத்திய அரசு ஒரு நடவடிக்கை எடுத்த போது தமிழக மக்கள் திரண்டெழுந்தார்கள்.

இந்தத் திரட்சியினுடைய விளைவால் அடுத்தநாளே நாடு கடத்தல் செயற்பாடு கைவிடப்பட்டது. இதனுடைய தாற்பரியத்தை ஈழத்தமிழர்களின் அரசியல் தலைமைகள் புரிந்து கொள்ளவேயில்லை. சென்னை ஒரு திறவுகோல் என்பதை நாம் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஈழத்திற்கும், தமிழகத்திற்கும் இடையிலே நிலவி வருகின்ற மீனவர் சார்ந்த முரண்பாடுகளைத் தமிழராக நாங்கள் எவ்வாறு எதிர்கொள்கின்றோம்? மீனவர் பிரச்சினையைத் தீர்ப்பதில் நாம் எவ்வாறான எமது அக்கறைகளை வெளிப்படுத்துகின்றோம்?

இந்தியா தனித்து ஒரு புவிசார் அரசு அல்லது பிராந்திய அரசு மட்டும் கிடையாது. அது தற்போது ஒரு பூகோள அரசு. அமெரிக்காவுடனும், ஐரோப்பிய நாடுகளுடனும், ரஷ்யாவுடனும் உலகளாவிய ரீதியான பொருளாதார, இராணுவப் பரிமாற்றங்களைக் கொண்டிருக்கக் கூடிய பெரும் வலுவான தேசம். அந்தத் தேசத்தை நோக்கி ஈழத்தமிழர்கள் சரியான கொள்கை வகுப்பைச் செய்ய வேண்டும். - என்றார். (ஒ-66)



## தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த கோரிக்கை

கிளிநொச்சி, மே 1

தற்போது நிலவி வரும் அதிக வெப்பமான நிலைமை காரணமாக பொது மக்களின் நீர்ப் பயன்பாடு வழமைக்கு மாறாக அதிகரித்துக் காணப்படுகிறது. இதனால் நாளாந்தம் அதிக நீரை சுத்திகரித்து வழங்க வேண்டிய நிலைமை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபைக்கு ஏற்பட்டுள்ளது.

மக்களின் நீர்ப் பாவனை தினமும் அதிகரித்துச் செல்லும் அளவுக்கேற்ப, சுத்திகரிக்கப்பட்ட நீரை வழங்குவதில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனவே பொது மக்கள் இந்நிலைமையைக் கருத்திற்கொண்டு நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை கேட்டுள்ளது. (ப)

## ஆணொருவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், மே 1

மானிப்பாய் கல்லூரி வீதியிலுள்ள வீடொன்றின் குளியலறையிலிருந்து ஆணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இராசநாயகம் சிவகுமார் (வயது - 60) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

அந்த வீட்டுக்கு வேலைக்கு சென்றவர்கள், சிவகுமார் குளியலறையில் சடலமாக இருப்பதை அவதானித்தனர். மானிப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

மானிப்பாய் பொலிஸார் சடலத்தை மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். சடலம் மீதான இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ஒ-27)

## ஒப்புக்குச் சப்பாணியாக கூட்டத்தை நடத்தாதீர்

### கூட்டத்தில் விவசாயிகள் காட்டம்

யாழ்ப்பாணம், மே 1

மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் கடமைக்காக அன்றி விவசாயிகளின் நலனை கருத்திற் கொண்டு நடத்தப்பட வேண்டும் என யாழ். மாவட்ட விவசாயிகள் விவசாய குழுக்கூட்டத்தில் தெரிவித்தனர்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதன் போதே அவர்கள் இவ்வாறு கூறினர். மாவட்டத்தில் தொடர்ந்து விவசாய குழுக்கூட்டம் இடம்பெறுகின்றது. ஒவ்வொரு முறையும் அதிகாரிகளும் வருகை தருகின்றார்கள்.

விவசாயிகளாக நாமும் வருகை தருகின்றோம். இந்தக் கூட்டங்களால் என்ன முன்னேற்றம் என்ற கேள்வியை எழுப்பவேண்டியுள்ளது.

கூட்டம் நடத்தினால் மட்டும் போதாது. அதன்மூலம் விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கவேண்டும் என்று குறிப்பிட்டனர். (ஒ-125)

## மொட்டுக்குத் திரும்ப விரும்பின் பேச்சு நடத்துவதற்குத் தயார்

### சாகர அறிவிப்பு



கொழும்பு, மே 1

பொதுஜன பெரமுனக் கட்சி, கூட்டணியில் இருந்து வெளியேறியவர்கள் மீண்டும் இணைந்து செயற்படத் தயாரெனில் அது தொடர்பில் பேச்சு நடத்துவதற்குத் தயார் என்று மொட்டுக் கட்சியின் செயலர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில உள்ளிட்டவர்களை மொட்டுக் கட்சி கூட்டணியில் இணைத்துக் கொள்வதற்கு பிரதமர் தினேஷ் குணவர்த்தனவின் உதவியை, பஸில் ராஜபக்ச நாடியுள்ளார் என வெளியாகும் தகவல்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். 'இது தொடர்பில் தனிப்பட்ட ரீதியில் எனக்கு எதுவும் தெரியாது. ஆனால் கட்சி என்ற ரீதியில், எம்மில் இருந்துவிலகிச்சென்றவர்கள் மீண்டும் இணையத் தயாரெனில் அது தொடர்பில் பேச்சு நடத்தி, பிரச்சினைகளைத் தீர்க்கத் தயாரென நாம் ஏற்கனவே அறிவித்துள்ளோம். பொதுஜன பெரமுன நாட்டு மக்களை நேசிக்கும் கட்சியாகும். நாட்டை மீட்ட தலைவரே கட்சிக்குத் தலைமைத்துவம் வழங்குகின்றார். நாட்டை நேசிக்கும் கட்சிகள் எம்முடன் இணைந்து செயற்படலாம்' - என்றார். (ஒ-44)

## மூளைக்காய்ச்சலாலேயே ஆவரங்கால் சிறுமி சாவு

யாழ்ப்பாணம், மே 1

ஆவரங்காலில் இரண்டு நாள்களுக்கு முன்னர் உயிரிழந்த சிறுமியின் உயிரிழப்புக்கான காரணம் வெளியாகியுள்ளது. [illegible] சேர்ந்த ஜெயச்சந்திரன் சஸ்மிகா (வயது - 5) என்ற சிறுமி அச்சுவேலி மருத்துவமனைக்கு அம்புலன்ஸ் வண்டியில் கொண்டு செல்லும்போது உயிரிழந்திருந்தார்.

அவரது உடற்கூற்றுப்பரிசோதனை நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட நிலையில், மூளைக்காய்ச்சலால் அவர் உயிரிழந்தமை கண்டறியப்பட்டுள்ளது. (ஒ-27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மேதின நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 1

வடமாகாணத் தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் மேதின நிகழ்வு இன்று புதன்கிழமை பி.ப. 3 மணியளவில் யாழ்ப்பாணம் கச்சேரியடியில் அமைந்துள்ள வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் சம்மேளனத்தின் தலைவர் த. சிவரூபன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

வவுனியாவில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சியின் மேதினக்கூட்டமும் ஊர்வலமும் நாளை காலை நடைபெறவுள்ளது. வவுனியா தமிழ்மத்திய மகாவித்தியாலயத்துக்கு முன்பாக காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் மேதின ஊர்வலம் வவுனியா நகரசபை மண்டபத்தை அடைந்து அங்கு மு.ப.10.30 மணியளவில் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது. (ம-66-110)

## பெற்றோல் விலை 3 ரூபா குறைப்பு!

கொழும்பு, மே 1

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தா பனம் நேற்று நள்ளிரவு முதல் எரிபொருள்களின் விலைகளைக் குறைத்துள் ளது.

இதன்படி, ஒக்ரேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 3 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 368 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒக்ரேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 20 ரூபாவால் குறைக்கப் பட்டு புதிய விலையாக 420 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.


அதேபோல், ஒரு லீற்றர் டீசலின் விலை 30 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 333 ரூபா நிர்ணயிக்கப்பட் டுள்ளது.

சுப்பர் டீசல் ஒரு லீற்றரின் விலை 9 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 377 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 20 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 215 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ம)

## மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 03 . 1941



மறைவு 30 . 04 . 2024

### கணபதிப்பிள்ளை செல்லத்துரை

உசன் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப் பிள்ளை செல்லத்துரை அவர்கள் நேற்று (30.04.2024) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், நல்லதம்பி - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், கருணேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பொன்னையா, இராமலிங்கம் மற்றும் சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும், செந்தூரன் (Durdans Laboratory, Jaffna) இன் பாசமிகு தந்தையும், சுகாசினி (இலங்கை வங்கி, சாவகச்சேரி) இன் அன்பு மாமனாரும்; அட்ஷயா, ஆதிரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் உசன் மிருசுவிலில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உசன் ஈச்சங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உசன், மிருசுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 9797 440

(CR 42325) A-1

## வளங்கள் விற்பனை கிளர்ந்தெழுவோம்

கொழும்பு, மே 1


தேசிய பாதுகாப்புடன் தொடர்புபட்ட தேசிய வளங்கள் விற்பனை செய்யப்படுவதை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம். மக்கள் தூங்கிக்கொண் டுள்ளனர் என ஆட்சியாளர்கள் நினைக்கக் கூடாது. அநீதிக்கு எதிராக நாம் நிச்சயம் கிளர்ந்தெழுவோம் என்று தேசிய வளங்களை பாதுகாக்கும் தேசிய அமைப்பின் முக்கியஸ்த ரான எல்லே குணவங்க தேரர் தெரிவித்தார். (ஒ-44)

## சு.க.வின் ஊர்வலத்தில் மைத்திரியும் பங்கேற்பு

இன்று நடைபெறவுள்ள சுதந்திரக்கட்சியின் மே தின ஊர்வலத்தில் சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தானும் பங்குபற்றப் போவதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். சுதந்திரக்கட்சியின் தலைவராக செயற்படுவதற்கு மைத்திரிக்கு நீதிமன்றம் தடை விதித்துள்ள நிலையில் மைத்திரி இந்த அறிவித்தலை விடுத்துள்ளார். (ம-6)

## கண்ணீர் அஞ்சலி

தாய் மடியில் 19 . 01 . 1939



ஆண்டவன் அடியில் 30 . 04 . 2024


### வேல்முருகு கனகசபாபதி

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண்நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்...

பிரிவால் தயருறும்

சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜக் குருக்கள்
சிவஸ்ரீ இராம சுந்தரலிங்கக் குருக்கள்
சிவஸ்ரீ சோம தனஞ்சய குருக்கள்
பிரதம குருக்களும், பரம்பரை அர்ச்சகரும்
ஆதீன கர்த்தாவும்
நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலயம்

## மரண அறிவித்தல்



### இராசையா இராமச்சந்திரன் (சந்திரன்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், பண்டத்தரிப்பு, அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா இராமச்சந்திரன் அவர்கள் கடந்த 27.04.2024 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், சின்னத்துரை- பார்வதி தம்பதியரின் பாசமிகு மருமகனும், வசுந்தராதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், ஜானகி, பாலச்சந்திரன், மகேஸ்வரன் மற்றும் ஜெயராஜா (யாழ்ப்பாணம்), ரமணி (கனடா), ரஞ்சினி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான பீஷ்மன், காங்கேசன், அசோகராஜா மற்றும் வசந்தா, மனோரஞ்சிதம், பெரியராணி, பிறேமா ஆகியோரின் மைத்துனரும், சந்திரகுமார், ஜெயாலினி (பிரான்ஸ்), வினோதன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிரிசாந்தினி, தசரதகுமார், தட்சாயினி ஆகியோரின் மாமனாரும், அபிராமி, சாயிநாத், சாயிசந்தோஷ், டக்சிசா, பிரதீபன், லஷ்மன், லக்ஷிகா, துவாரகன், சக்திகா, ஜெனார்த்தன், அட்சயன், அக்ஷாயினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பண்டத்தரிப்பு விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் வீதி,
பண்டத்தரிப்பு

தகவல்:
குடும்பத்தினர்.
077 724 7969, 074 108 9779 (மகன்)

(CS 00372) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அர்த்தமிழக்கும் மேதினம்

இன்று மே 1. உழைக்கும் வர்க்கமாகிய தொழிலாளர்களைப் போற்றும் நாள். உலக வரலாற்றின் முக்கியமான நிகழ்வுகளில், தொழிலாளர் வெற்றியை நினைவுகூர்ந்து முன்னெடுக்கப்படும் மே தினமும் ஒன்று. முதலாளி வர்க்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராக உலகத் தொழிலாளர்கள் ஒன்றுபட்டதன் மூலம் தமது உரிமைகளை நிலைநாட்டிய நிகழ்வின் சிறப்பாகவே மே தினம் கொண்டாடப்படுகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் மே தினம் அதன் தாற்பரியத்தை உணர்ந்து முன்னெடுக்கப்படுவதில்லை. மே தினம் என்பது அரசியல் கட்சிகளின் பலப்பரீட்சைக் களம் என்ற வட்டத்துக்குள் முற்றுமுழுதாக அரசியல் மயப்படுத்தப்பட்டிருக்கின்றது, இம்முறையும் அதுவே நடக்கின்றது. தேர்தல் ஒன்றை நாடு எதிர்பார்த்திருக்கும் நிலையில், அரசியல் கட்சிகள் தங்களுக்கான மக்கள் ஆதரவைப் பறைசாற்றுவதற்கான சந்தர்ப்பமாகவே மே தினத்தைக் கையாள்கின்றன. இவ்வாறான மே தினக் கூட்டங்களால் எதுவும் நடந்துவிடப்போவதில்லை, ஆரோக்கியமான மாற்றங்கள் ஏற்பட்டுவிடப்போவதுமில்லை.

தொழிலாளர்களின் வெற்றியைப் போற்றும் நிகழ்வு என்பதற்கு அப்பால் மே தினம் என்பது மக்கள் எழுச்சியை - ஒற்றுமையை நீட்டித்துச் செல்வதற்கான ஒரு சிறந்தவழியாகும். மக்களை ஒன்று திரட்டவும் - ஒரு கொள்கையின்பால் அவர்களை வழிப்படுத்தவும் பல நாடுகளில் மே தினம் உதவியிருக்கின்றது - அங்குள்ள தலைவர்கள் மே தினத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தியிருக்கின்றார்கள். அடக்குமுறைக்குள் சிக்கி - உரிமைகளை இழந்து நிற்கும் தமிழர் தரப்பு இந்த விடயத்திலும் தோல்வியடைந்திருக்கின்றது என்பதை ஒப்புக் கொள்ளவே வேண்டும்.

அடக்குமுறைக்குள்ளான ஓர் இனம் அதில் இருந்து மீண்டெழவேண்டுமானால் மக்களை ஒன்றுபடுத்தி எழுச்சியை ஏற்படுத்த வேண்டியது கட்டாயமானது. மே தினம் போன்ற நிகழ்வுகளின் ஊடாகவே அவ்வாறான எழுச்சியை ஏற்படுத்த முடியும். நாட்டில் போர் முடிவுக்குக் கொண்டு வரப்படுவதற்கு முன்னர் தமிழர் பகுதிகளில் விடுதலைப் புலிகள் அமைப்பினர் கூட மிகப் பிரமாண்டமாக மே தின நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதை வழமையாகக் கொண்டிருந்தனர். அவர்கள் நடத்திய மே தினப் பேரணிகள் மக்கள் மனங்களில் மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தன. ஆனால், தமிழர் தரப்பில் இப்போது மே தினம் என்பது சம்பிரதாயக் கூட்டத்துடன் முடிந்துவிடுகின்றது. தமிழ்த் தலைமைகளின் ஆரோக்கியமற்ற இந்தப் போக்கு மாற்றப்படுவது அவசியம்.

அடக்குமுறைகள் களையப்பட்டு, நாட்டில் உள்ள அனைத்து இனங்களும் சமமாக மதிக்கப்பட்டு அவர்களுக்கான உரிமைகள் கிடைக்கும் போதே இலங்கையில் மே தினம் என்பது அர்த்தமுடையதாக மாறும். மக்கள் சக்தியை ஒன்றிணைத்து மாற்றத்தை ஏற்படுத்தி அவ்வாறான இலங்கையைக் கட்டியெழுப்ப இன்றைய நாளில் அனைவரும் உறுதிபூணுவோம்.




# மின்சாரசபை மறுசீரமைப்பு இருண்ட யுகத்துள் தள்ளும்!

## மின் பொறியியலாளர் சங்கம் சுட்டிக்காட்டு

**கொழும்பு, மே 1**

**நாட்டின் மின்கட்டமைப்பை இருண்ட யுகத்துக்குத் தள்ளும் வகையில் உத்தேச மின்சாரசபை மறுசீரமைப்பு சட்டவரைவு நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என மின்சாரசபையின் மின் பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் தனுஸ்க பராக்ரம தெரிவித்துள்ளார்.**

உத்தேச மின்சாரசபை மறுசீரமைப்புச் சட்டவரைவில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. மின்சாரசபையை 12 ஆக கூறுபடுத்தி அதன் உரிமத்தை தனியார் நிறுவனங்களுக்கு உரித்தாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மின்கட்டணத்தை தீர்மானிக்கும் உரிமையை தனியார் நிறுவனங்களுக்கு வழங்குவது முறையற்றது. மின்கட்டமைப்பில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் வகிபாகத்தை வரையறுப்பதற்கும் இந்தச் சட்டவரைவில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. நியாயமற்ற வகையில் மின்கட்டணம் அதிகரிக்கப்படும்போது பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அதற்கு இடமளிக்காததால் ஆணைக்குழுவின் அதிகாரம் மட்டுப்படுத்தப் படவுள்ளது. நாட்டின் மின்கட்டமைப்பை இருண்ட யுகத்துக் குத் தள்ளும் வகையில் சட்டவரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே சட்டவரைவிலுள்ள குறைகளை அரசாங்கம் திருத்திக் கொள்ளாவிடின் அதனை நீதிமன்றில் சவாலுக்குட்படுத்துவோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



## ட்ரோனுக்கு தடை

கொழும்பு, மே 1

மே தினக் கொண்டாட்டங்களை காணொலி பதிவு செய்ய ட்ரோன்களை அனுமதியின்றிப் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவ்வாறு ட்ரோன்களை பயன்படுத்துவது அவசியமானால் அதற்கு முன் அனுமதி பெற வேண்டும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (ச-இ)

## காஸா நிதி சேகரிப்பு கால எல்லை நீடிப்பு

கொழும்பு, மே 1

காஸாவில் இடம்பெறும் மோதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய ஆரம்பிக்கப்பட்ட காஸா சிறுவர் நிதியத்துக்கு பங்களிப்புச் செய்வதற்கான கால எல்லை எதிர்வரும் 31 வரை நீடிக்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட கால அவகாசம் ஏப்ரல் 30ஆம் திகதியுடன் முடிவடைய இருந்த நிலையில் பொது மக்களின் கோரிக்கையின்படி கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## வாகன அனுமதி: எம்.பி.க்கள் கோரிக்கை

தீர்வையற்றவாகன இறக்குமதி அனுமதி வழங்கக்கோரி நாடாளுமன்ற உறுப்பினர்களால் சபாநாயகருக்குக் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. இந்தக் கோரிக்கை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படும் என்றும் சபாநாயகர் தெரிவித்துள்ளார். (எ-இ)



## யாசகமிட்டால் இனி அபராதம்

கொழும்பிலுள்ள பிரதான பகுதிகள் மற்றும் வீதிகளில் யாசகம் பெறுபவர்களுக்குப் பணம் கொடுப்பவர் களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்த தீர்மானிக் கப்பட்டுள்ளது என்று பொலி ஸார் தெரிவித்துள்ளனர். அதன்படி, யாசகர்களுக்கு பணம் கொடுத்தால் அபராதம் விதிக்கப்படவுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

### நாளை

02.05.2024
வியாழக்கிழமை
சித்திரை - 19

சுபநேரம் : 07.27 - 08.57
ராகுகாலம் : 01.27 - 02.57

### நாளொரு நல்வார்த்தை

போதும் என்று நொந்துபோய் புதுவாழ்வைத் தேடுகிறீர்களா... ஒரு புதிய புத்தகத்தை வாங்கி வாசிக்கத் தொடங்கு...

-இங்கர்சால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குருதிக் கொடை

*யாழ்ப்பாணம், மே 1*

*சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு, ஏழாலை இந்து இளைஞர் சபையினரின் ஏற்பாட்டில் மாபெரும் குருதிக் கொடை முகாம் நிகழ்வு, ஏழாலை மேற்கு உதயசூரியன் சனசமூக நிலைய மண்டபத்தில் இன்று புதன்கிழமை காலை 8.30 மணி முதல் பி.ப. 2 மணி வரை நடைபெறவுள்ளது. (ப-66)*

## பொதுவேட்பாளரை...

வவுனியா வாடிவீடு விடுதியில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் அடிப்படையிலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்மக்கள் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் தமது இறைமையையும், சுயநிர்ணய உரிமையையும் பிரயோகிப்பதற்கான ஒரு களமாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைக் கையாள்வது எனவும், ஜனாதிபதித் தேர்தலை, ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் என்ற அடிப்படையில் நிராகரித்து அந்தத் தேர்தலை ஈழத்தமிழ் மக்களுக்கான பொதுவாக்கெடுப்பாகக் கையாள்வதெனவும், இதற்கமைய ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவது என்றும் கலந்துரையாடலின்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள், தென்கயிலை ஆதீன முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார், திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயல் இம்மானுவேல் ஆண்டகை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல்துறைத் தலைவர் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், அரங்க செயற்பாட்டுக் குழுவின் தலைவர் கலாநிதி க.சிதம்பரநாதன், மட்டக்களப்பைச் சேர்ந்த சமூகச் செயற்பாட்டாளர் அருட்பணி த.ஜீவராஜ், அரசியல் ஆய்வாளர் எம்.நிலாந்தன், மன்னார் மாவட்ட மனித உரிமைச் செயற்பாட்டாளர் அருட்பணி பி.ஞானராஜ் மற்றும் யாழ்.மறை மாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு, பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரமுச்சி இயக்கம், தமிழ் சிவில் சமூக அமையம், வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கம், திருகோணமலை அறிவார் சமூகம், அகில இலங்கை மீனவர் மற்றும் விவசாய தொழிலாளர்களின் கூட்டமைப்பு, கரைச்சி வடக்கு சமாசம், சமூக விஞ்ஞான ஆய்வு மையம், மட்டக்களப்பு சிவில் அமைப்பு, தமிழ் ஊடகத் திரட்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், கிழக்குப் பல்கலைக்கழகத் தமிழ் மாணவர் ஒன்றியம், வவுனியா மாவட்டக் கமக்காரர் அமைப்பு, தமிழ் இளையோர் மக்கள் இயக்கம், தமிழர் கலை, பண்பாட்டு மையம், எம்பவர் நிறுவனம், வடக்கு - கிழக்கு மக்கள் மனு சிவில் சமூகக் குழு, குரலற்றவர்களின் குரல் அமைப்பு, மயிலத்தமடு மாதவனைக் கால்நடை பண்ணையாளர் அமைப்பு, வவுனியா சமூக மாற்றத்துக்கான அமைப்பு, திருகோணமலை தமிழ் சமூகச் செயற்பாட்டாளர்கள் இணையம், திருகோணமலை புழுதி சமூக உரிமைகளுக்கான அமைப்பு, திருகோணமலை நலிவுற்ற சமூகங்களின் அபிவிருத்திக்கான தன்னார்வ அமைப்பு ஆகிய சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (அ-ம-66-100)

## தொழிலாளர்...

தொழிலாளர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஆசீர்வாதம் ஜோன்சன் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு மே தினங்களுக்கும் நாங்கள் அறைகூவல் விடுகிறோம். ஆனால், எங்களுடைய உரிமைக்குரல்கள் செவிசாய்க்கப்படவில்லை. மே தின மேடைகளில் சுத்திகரிப்புத் தொழிலை அத்திபாரத்தொழில் என்று பெருமைபேசுகின்றனர். ஆனால், எமக்கான உரிமைகள் வழங்கப்படுகின்றனவா? என்ற கேள்வியை நாங்கள் கேட்க விரும்புகின்றோம்.

ஊதிய உயர்வை வலியுறுத்தி மலையக மக்கள் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கின்றனர். ஆயிரம் ரூபா ஊதியம் அவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது. இதுதான் தற்போதைய நிலைமையாக உள்ளது. தொழிலாளர் தினத்தைத் தாண்டி எமது உரிமைகள் உறுதிப்படுத்தப்படவேண்டும். அனைத்து அரசியல்வாதிகளும் அது தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

சுத்திகரிப்பு தொழிலாளர்களுக்கான பாதுகாப்புக் கவசங்கள் வழங்கப்பட வேண்டும். தொழிலாளர்களுடைய பிரச்சினைகளை நாங்கள் முன்வைக் கின்ற பொழுது நாங்கள் அரசாங்கத்தின் விரோதிகள் என்று கூறுகின்றார்கள். பொருளாதார நெருக்கடிக்குள் உரிய ஊதியம் இல்லாமல் நாங்கள் துன்பப்படுகின்றோம். அடிமை, அடிமைத்தனம், கொத்தடிமைத்தனம் இந்த மூன்று அடிமைத்தனங்களிலிருந்தும் தொழிலாளர்கள் விடுவிக்கப்பட வேண்டும். மே தினம் என்பது தொழிலாளர்களுக்கானது. அதை வேறு நோக்கங்களுக்காக மடைமாற்றுவதை விடுத்து தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுக்க அனைவரும் ஓரணியில் ஒன்றுபடும் போதே நாடு வளரும். வளம்பெறும் - என்றார். (அ-ம-125)

## வடக்கு...

கல்லூரியிலும், கிழக்கு மாகாணம் தழுவிய தமிழ்த் தேசிய மேதின நிகழ்வு மட்டக்களப்பு பெரிய கல்லாறிலும் இன்று புதன்கிழமை

முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைத் தமிழரசுக் கட்சியும், கிளிநொச்சி மாவட்டத் தொழிற்சங்கங்களும் இணைந்து நடத்தும் மேதின எழுச்சிப் பேரணியும், மேதினக் கூட்டமும் நாளை (இன்று) பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில ஊர்வலத்துடன் ஆரம்பித்து பி.ப. 3 மணியளவில் பொதுக் கூட்டம் தொடங்கி மிகவும் எழுச்சியாக நடைபெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேபோன்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிழக்கு மாகாணத்துக்கான தமிழ்த் தேசிய மேதின எழுச்சி நாள் நிகழ்வுகள் நாளை (இன்று) பிற்பகல் 2 மணியளவில் பெரியகல்லாறு பிள்ளையார் ஆலய முன்றிலில் ஆரம்பமாகி இடம் பெறும்.

காலாகாலமாகத் தமிழ்மக்கள் அடக்குமுறைகளுக்குள்ளும், ஒடுக்குமுறைகளுக்குள்ளும் நசுங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்ற செய்தியை உலகப்பரப்பினர் மத்தியில் சொல்லும் வகையிலும், தமிழ்மக்களின் அரசியல் உரிமைகளை வெளிப்படுத்தும் வகையிலும் தமிழ்த் தேசிய மேதின எழுச்சி நாள் நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு மேதின எழுச்சி நாள் நிகழ்வுகளிலும் மக்கள் பெரும் திரளில் கலந்துகொள்ளவேண்டும் - என்றார். (அ-ம-66)

## 13 ஆவது...

வரும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காலநிலை சார் ஆலோசகருமான எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் - அல்லைப்பிட்டியில் அமைந்துள்ள கடலுணவு நிறுவனமொன்றுக்கு களப்பயணத்தை மேற்கொண்ட அவர், ஊடகங்களைச் சந்தித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தில் உள்ள பொருளாதார, சமூக, சுற்றாடல் நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக வருகைதந்துள்ளேன். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான சமாதான நடவடிக்கைகளின் போது ஒருவனாகச் செயற்பட்ட நான், தற்போது மீண்டும் ஒருதடவை யாழ்ப்பாணம் வந்துள்ளேன்.

இலங்கையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவேண்டுமாயின், சிங்கள, முஸ்லிம், தமிழர்கள் என்ற வேறுபாடு இல்லாமல் அனைவரும் ஓரணியில் செயற்படவேண்டும். தமிழ் மக்களினுடைய இனப்பிரச்சினைக்கு 13ஆவது திருத்தச் சட்டமே அடிப்படையாக அமையும். கீழ்மட்டம் நோக்கி அதிகாரம் பரவலாக்கப்படவேண்டும். அதாவது 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் காணப்படுகின்ற மாகாணசபை ஊடாக அதிகாரம் கிடைக்கப்பெறவேண்டும் - என்றார். (அ-ம-125)

## பொதுவேட்பாளர்...

கள் வலியுறுத்தியுள்ளனர்.

காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதிகோரியும், அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துமாறும் வலியுறுத்தி, வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் பின்னரேயே அவர்கள் இவ்வாறு வலியுறுத்தியுள்ளனர்.

நாளைய தினம் (இன்று புதன்கிழமை) தொழிலாளர் தினமாகும். தற்போது உழைப்பாளி என்ற வர்க்கத்தில் நாங்கள் இல்லாமல் கையேந்தும் வர்க்கத்தில் உள்ளோம். எனவே எங்களது உறவுகளை மீண்டும் எமக்குத் திருப்பித்தர வேண்டும் என்பதற்காகவே போராடிக் கொண்டிருக்கிறோம். எமக்கான நீதியினை பெற்றுத்தராமல் சர்வதேசமும் தொடர்ச்சியாக எங்களை ஏமாற்றிக் கொண்டுதான் இருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவது தொடர்பில் தற்போது பேச்சடிபடுகின்றது. பொது வேட்பாளரை நியமிப்பதற்காக அனைவரும் ஓரணியில் நின்று ஒன்றுபட்டுத் தீர்மானங்களை மேற்கொள்ளவேண்டும் என்றனர். (அ-ம-110)

## ஆயுதங்கள்...

காமையில் உள்ள தனியார் காணிக்குள் ஆயுதங்கள் இருப்பதாகத் தெரிவித்து, நீதிமன்றத்தின் அனுமதி பெற்று இந்த அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. காலை 8.30 மணிமுதல் சுமார் 3 மணிநேரம் இந்த அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் ஆயுதங்கள் எவையும் கிடைக்கப்பெறாததையடுத்தே அகழ்வுப் பணிகள் கைவிடப்பட்டன. (அ-ம-125)

## யாழ்...

உணவுப் பாதுகாப்புத் தொடர்பான செயலமர்வு, ய்யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில், யாழ்ப்பாணம் மாவட்ட பதில் மாவட்டச் செயலர் ம.பிரதீபன் தலைமையில் காலை, மதியம் என இரு அமர்வுகளாக நேற்று நடைபெற்றது.

நிகழ்வில் பதில் மாவட்டச் செயலர் ம.பிரதீபன் தெரிவித்ததாவது:-

இலங்கையிலேயே முதன்முதலாக யாழ். மாவட்டத்தில்தான் உணவுப் பாதுகாப்புத் தொடர்பான திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. உணவு பாதுகாப்புத் தொடர்பான புள்ளி விவரங்களைச் சேகரித்து வைத்திருப்பதன் மூலம் எமது மாவட்டத்தில் உணவுப் பாதுகாப்பில் பின்தங்கிய கிராமம் மற்றும் போசாக்கற்ற உணவுப் பழக்கவழக்கமுள்ள பிரதேசங்களை இனங்கண்டு அதற்கேற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும் - என்றார். (அ-ம-66)

## மூன்று...

மூன்றுக்கு மேற்பட்ட விபத்துகளை ஏற்படுத்தியமை, வீதியில் போட்டித்தன்மையுடன் பயணித்தமை, போக்குவரத்து விதிமுறைகளைக் கடைப்பிடிக்காமை போன்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இந்தப் பேருந்துகளின் வழித்தட அனுமதிப் பத்திரங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் இந்தச் செயற்பாட்டுக்கு மக்கள் பெரும் வரவேற்பைத் தெரிவித்துள்ளனர். (அ-ம-18-110)

## புங்குடுதீவு...

வுள்ள காணிக்குள் மனித எலும்புக்கூடுகள் அண்மையில் அவதானிக்கப்பட்டன. இது தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு, ஊர்காவற்றுறை நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்ட நிலையில், நீதிமன்றின் உத்தரவுக்கு அமைவாக நாளை அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (ம-125)

## வெற்றுக்...

வாள்கள் மற்றும் ஒரு கஜேந்திர வாள் என்பன இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. (அ-ஒ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01.05.2024
புதன்கிழமை

புதன் பொய்கை

பழங்காலத்திய மகா புருஷர்களை நேரில் தரிசித்து அவர்களுடன் உரையாட வேண்டுமா? நூலகத்துக்குப் போ
*- மா ஒ சேதுங்*



**யோ.மேரி லியோனியா**
*ஊடககற்கைகள் துறை*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*







# முல்லைத்தீவில் மேம்பட்டுவரும் உயிர்ப்பல்வகைமை

முல்லைத்தீவு மாவட்டம் செழுமையான காடுகள், அழகிய கடற்கரைகள் மற்றும் பல்வேறு வன விலங்குகள் உட்பட வளமான பல்லுயிர் மற்றும் இயற்கை நிலப்பரப்புகளைக் கொண்டுள்ள பரந்து விரிந்த தேசமாகும். எனினும், பல தசாப்தங்களாக இடம்பெற்ற மோதல்கள் மற்றும் போருக்குப் பிந்தைய வளர்ச்சி என்பன பிராந்தியத்தின் சுற்றுச்சூழலுக்கு குறிப்பிடத்தக்க சவால்களை முன் வைத்துள்ளது என்பது மறுத்துரைக்கப்படமுடியாததே.
அண்மைய ஆண்டுகளில், முல்லைத்தீவின் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாத்து மறுசீரமைக்க ஒருங்கிணைந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இந்தக் கட்டுரை முல்லைத்தீவில் சுற்றுச் சூழல் பாதுகாப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை ஆராய்வதோடு, இந்த முயற்சிகளை நிலைநிறுத்துவதற்கான எதிர்கால வாய்ப்புகளையும் விவாதிக்கிறது.

## முல்லை எதிர்கொள்ளும் சுற்றுச்சூழல் சவால்கள்

பாதுகாப்பு முயற்சிகளை ஆராய்வதற்கு முன், முல்லைத்தீவு எதிர்கொள்ளும் சுற்றுச்சூழல் சவால்களைப் புரிந்துகொள்வது அவசியம். காடழிப்பு, வாழ்விட சீரழிவு, மண் அரிப்பு மற்றும் மாசுபாடு, சட்டவிரோதமாக முன்னெடுக்கப்படும் கனியவள கடத்தல் ஆகியவை இன்றைய திகதியில் முல்லைத்தீவைப் பாதிக்கும் முக்கியமான பிரச்சினைகளாகும். நீடித்த மோதல் மரங்கள் மற்றும் விவசாயத்துக்காக பரவலான காடழிப்புக்கு வழி வகுத்தது, இதன் விளைவாக பல உயிரினங்களின் வாழ்விட இழப்பு ஏற்பட்டது. மேலும், இடம்பெயர்ந்த சமூகங்கள் மீளக் குடியமரும்போதும், போருக்குப் பிந்தைய அபிவிருத்தி நடவடிக்கைகளும் இயற்கை வளங்கள் மீதுகூடுதல் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளன. சவால்களுக்கு மத்தியிலும் முல்லைத்தீவில் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அது பாதுகாக்கப்பட்ட பகுதிகள் மற்றும பாதுகாப்பு இருப்புகளை நிறுவுதல் ஆகும். வெடித்தலத்தீவு சரணாலயம் மற்றும் கொக்கிளாய் சரணாலயம், நாயாறு குளம் ஆகியவை தனித்துவமான சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதற்கும் வனவிலங்குகளின் வாழ்விடங்களைப் பாதுகாப்பதற்கும் நோக்கமாக உள்ள பாதுகாக்கப்பட்ட பகுதிகளாகும். அத்துடன், பாழடைந்த நிலங்களை மீட்டெடுக்கவும், காடழிப்பின் விளைவுகளைத் தணிக்கவும் மீண்டும் காடுகளை வளர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## சுற்றாடல் பாதுகாப்பில் சமூகத்தின் ஈடுபாடு


முல்லைத்தீவில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு முயற்சிகளில் சமூக ஈடுபாடு பிரதான பங்கு வகிக்கிறது. விழிப்புணர்வை ஏற்படுத்தவும், நிலையான நடைமுறைகளை மேம்படுத்தவும், பாதுகாப்பு நடவடிக்கைகளில் சமூகங்களை ஈடுபடுத்தவும் உள்ளூர் நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள் மற்றும் அடிமட்ட முன்முயற்சிகள் ஒத்துழைக்கின்றன. கல்வித் திட்டங்கள், மரம் நடும் பிரச்சாரங்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழ்வாதாரத் திட்டங்கள் ஆகியவை குடியிருப்பாளர்களை தங்கள் சுற்றுச்சூழலின் பொறுப்பாளர்களாக ஆக்க உதவுகிறது. அண்மையில் கூட முல்லைத்தீவு மாவட்ட சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பான ஒருங்கிணைப்பு கூட்டங்கள் நடைபெற்றன. முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவரும் இராஜாங்க அமச்சருமான காதர் மஸ்தான் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான முக்கியமான விடயங்கள் கூறப்பட்டன. மாவட்டத்தில் சட்டவிரோதமாக முன்னெடுக்கப்படும் கனியவளங்கள் கடத்தல்களைக் கட்டுப்படுத்தல் தொடர்பிலும் கனிய வளங்களை கொண்டுசெல்லுவதற்கான அனுமதிப்பத்திரம் பெற்றுள்ளமை அகழ்வுக்கான அனுமதிப்பத்திரங்களின் மீள் பரிசீலனைக்குட்படுத்தல் தொடர்பிலும், மாவட்டத்தின் புவியியல் சாதக பாதக மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பிலும் மண் இகல் அகழ்வுகளை மேற்கொண்ட பகுதிகளில் புனர்நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டது.
முல்லைத்தீவு மாவட்ட சுற்றாடல் அதிகாரசபையினால் நடத்தப்பட்ட சமீபத்திய ஆய்வின்படி, கடந்த ஐந்து வருடங்களில் காடழிப்பு வீதம் 20 வீதத்தால் குறைந்துள்ளது,
மறு காடழிப்பு முயற்சிகள் மற்றும் சுற்றாடல் விதிமுறைகளை கடுமையாக அமுல்படுத்துதல் ஆகியவை இதற்கு காரணமாகும். செயற்கைக்கோள் படபகுப்பாய்வு முல்லைத்தீவின் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் காடுகளின் பரம்பல் படிப்படியாக அதிகரிப்பதை வெளிப்படுத்துகிறது, இது பாதுகாப்பு நடவடிக்கைகளின் செயற்றிறனைக் குறிக்கிறது.
மேலும், வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்குள் வனவிலங்குகளின் பன்முகத்தன்மை அதிகரிப்பதாகத் தெரிவிக்கிறது. வெடித்தலத்தீவு சரணாலயத்தில் அழிந்துவரும் உயிரினங்களின் இருப்பு பேணப்படுகின்றன. இது வாழ்விடப் பாதுகாப்பின் முக்கியத்துவத்தைக் குறிக்கிறது. முன்னோக்கிப் பார்க்கும்போது, முல்லைத்தீவில் நிலையான பாதுகாப்புக்கான பல வழிகள் முன்னெடுக்கப்படுகின்றன. நிறுவன திறன் மற்றும் நிர்வாகக் கட்டமைப்புகளை வலுப்படுத்துவது பங்குதாரர்களிடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதோடு பாதுகாப்புக் கொள்கைகளை திறம்பட செயற்படுத்துவதை உறுதி செய்யும். அறிவியல் ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்புத் திட்டங்களில் தொடர்ந்து முதலீடு செய்வது, பாதுகாப்பு உத்திகளை வழிநடத்தவும் அவற்றின் தாக்கத்தை அளவிடவும் மதிப்புமிக்க தரவை வழங்கும்.
மேலும், நீண்ட கால நிலைத்தன்மையை அடைவதற்கு பாதுகாப்பு நோக்கங்களை பரந்த வளர்ச்சித் திட்டங்களில் ஒருங்கிணைப்பது அவசியம். சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் பொருளாதார வளர்ச்சியை சமநிலைப்படுத்துவதற்கு சுற்றுச்சூழல் சுற்றுலா மேம்பாடு, நிலையான விவசாய நடைமுறைகள் மற்றும் பசுமை உள்கட்டமைப்புத் திட்டங்கள் போன்ற புதுமையான அணுகுமுறைகள் தேவை.
திறன் மேம்பாடு, மாற்று வாழ்வாதார வாய்ப்புகள் மற்றும் சமமான பலன்பகிர்வு வழிமுறைகள் மூலம் உள்ளூர் சமூகங்களுக்கு அதிகாரம் அளிப்பது உரிமை உணர்வை வளர்க்கும் மற்றும் உள்ளடக்கிய பாதுகாப்பு முயற்சிகளை ஊக்குவிக்கும். பாரம்பரிய அறிவு மற்றும் உள்நாட்டு நடைமுறைகளைப் பயன்படுத்துவதன் மூலம், கலாசார மற்றும் சுற்றுச்சூழல் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் சமூகங்கள் பங்களிக்க முடியும். கூட்டு முயற்சிகள் மற்றும் சமூக ஈடுபாட்டின் காரணமாக முல்லைத்தீவில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு முயற்சிகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளன. சவால்கள் தொடர்ந்தாலும், இதுவரை அடைந்துள்ள முன்னேற்றம், பிராந்தியத்தில் நிலையான வளர்ச்சிக்கான சாத்தியத்தை நிரூபிக்கிறது. கடந்தகால வெற்றிகளைக் கட்டியெழுப்புவதன் மூலமும், புதுமையான தீர்வுகளைத் தழுவுவதன் மூலமும், முல்லைத்தீவை எதிர்கால சந்ததியினருக்கான ஒரு நெகிழ்ச்சியான மற்றும் செழிப்பான தேசமாக உருவாக்கமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துலா!

## மெல்ல அழிந்துவரும் எங்கட கண்டுபிடிப்பு!



■ த.தர்சிகா
ஊடக கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

தமிழர் வாழ்வியலில் 'துலா' என்பது தவிர்க்கப்பட முடியாததாகவே இருந்து வந்திருக்கின்றது. விவசாயத்துக்காகவும், வீட்டுத் தேவைகளுக்காகவும் முன்னோர்கள் தண்ணீரைப் பெறுவதற்காக துலாக்களைப் பயன்படுத்தினார்கள். ஆனால் இன்று அவை காணக்கிடைக்காத பொருள்களாக மாறிவிட்டன. ஆலயங்கள், பொதுக்கிணறுகள் என்பவற்றில்தான் ஊருக்கு ஒன்றாகவும், பிரதேசங்களுக்கு ஒன்றாகவும் இன்று துலாக்கள் காணப்படுகின்றன.

'அப்பயெல்லாம் இந்த மிசினுகள் இல்ல. துலாதான் எங்களுக்கு எல்லாமே. எனக்குத் தெரிஞ்சு பழைய காலத்தில எல்லாரின்ட வீட்டிலயும் துலாக் கிணறு இருந்தது. இப்ப அதொண்டும் இல்ல. இணுவில் கந்தசாமி கோயில்ல ஒண்டு இருக்கவேணும்' என்கின்றார் அளவெட்டியை சேர்ந்த ஆறுமுகம் ஐயா. அழிந்துவிட்ட துலாக்களின் பயன்பாட்டை முற்றாக உணர்ந்த அவருடைய 'சாட்சியம்' எத்தனை கனதியானது.



### அமைப்பு

துலாக்கள் பனைமரத்தை இரண்டாகப் பிளந்து செதுக்கி உருவாக்கப்படுவன. துலாவை நிறுத்துவதற்கான பகுதி ஆடுகால் எனப்படும். துலா முன்னும் பின்னுமாக ஆடுதற்குத் துணையாகப் பேண் தடிகள் பிணைக்கப்படுகின்றன. இதற்கு வசதியாக நடப்படும் உறுதிமிக்க பூவரசங்கதிகால்களே ஆடுகால்கள் எனக் காரணப் பெயர் கொண்டு அழைக்கப்பட்டன. பின்னர் சிமெந்தினால் இது செய்யப்பட்டது. ஒரு காலத்தில் கிணறுகளிலிருந்து துலா மூலம் நீரை எடுப்பதற்குச் சூரைக்கொடிகளே பயன்படுத்தப்பட்டன. வளவுகள் தோறும் சூரைக் கொடிகள்; இருந்த அந்தக் காலத்தில் முற்றிய கொடிகளை வெட்டி எடுத்துச் சுட்டு தோல் நீக்கி மரங்களில் கட்டித் தொங்கவிட்டு நெளிவெடுத்துப் பின்னர் துலாக்களில் பிணைப்பதுண்டு. துலாநுனியுடன் கொடி இணைத்துக் கட்டப்படும் பகுதி கொண்டடி எனப்படும். துலாவைக் கீழ்நோக்கியும் கிணற்றுப்பட்டையில் உள்ள நீரை மேல்நோக்கி வெளியேயும் கொண்டோட உதவுவதால் இவ்விணைப்பு கொண்டோடி எனப்பட்டது. இது காலப்போக்கில் கொண்டடி என மருவியது. துலாக்கிணறுகள் முன்னைய காலங்களில் மிகையான பயன்பாட்டுக்கு உரித்தானவாகவே இருந்துள்ளன. 'எத்தனம்' என்கின்ற தொழில்நுட்பத்தை மையப்படுத்தியே துலாக் கிணறுகள் அமைக்கப்பட்டன.

இன்றைய நாள்களில் துலாக் கிணறுகளானவை பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, அளவெட்டி, சந்நிதி போன்ற இடங்களில் இருப்பதை அவதானிக்க முடிகின்றது. தமிழர்களின் தொன்மைக் கண்டுபிடிப்பான துலாக்களின் பயன்பாடு இன்றைய நவீனகாலத்தில் யதார்த்தத்துக்கு அப்பாற்பட்ட சிந்தனைக்குரியதாக இருந்தாலும், குறைந்தபட்சம் ஆலயங்கள் மற்றும் பொதுவிடங்களிலேனும் அவற்றை ஆவணப்படுத்தி வைக்கவேண்டும். எதிர்காலச் சந்ததிக்கு எம் தொன்மத்தைக் கடத்துவது ஆகப்பெரும வரலாற்றுக் கடமையே. ■



# சத்தியசோதனை

## 40 வருடங்களின் பின் மேடையேற்றம்

■ இயல்வாணன்

பேராசிரியர் சி.ஜெய்சங்கரின் நெறியாள்கையில் கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை மாணவர்களின் சத்தியசோதனை நாடகம் கடந்த வாரம் 25ஆம், 26ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் 5 இடங்களில் 6 தடவைகள் ஆற்றுகை செய்யப்பட்டது. கொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவையிலும், திருமறைக்கலாமன்றத்திலும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி (இரு தடவை), சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆகியவற்றிலும் இந்த நாடக ஆற்றுகை நடைபெற்றது. 1984ஆம் ஆண்டளவில் குழந்தை ம.சண்முகலிங்கத்தால் எழுதப்பட்ட இந்த நாடகம் அப்போது கலாநிதி க.சிதம்பரநாதனது நெறியாள்கையில் பல அரங்குகள் கண்டிருந்தது. 40 வருடங்கள் கழித்து இந்த நாடகம் மீண்டும் மேடையேற்றப்பட்டுள்ளமை முக்கியமானதாகும். இந்த நாடகம் நடைமுறைக் கல்வி தொடர்பான விமர்சனங்களை முன்வைத்து கேள்வி எழுப்புவதுடன் பொருத்தமான கல்விமுறையின் இன்றியமையாமை தொடர்பில் சிந்தனைத் தூண்டலை ஏற்படுத்துவதாக ஆக்கப்பட்டுள்ளது.

40 வருடங்களுக்கு முன்னர் இந்தக் கல்வி தொடர்பில் என்னென்ன விடயங்கள் பேசப்பட்டனவோ அவையெல்லாம் இன்றும் பேசப்படுகின்ற, மேலும் மோசமாகச் சீரழிந்திருக்கிற நிலையை இந்த நாடகத்தைப் பார்ப்பவர்கள் உணரக்கூடிய வகையில் அமைந்திருக்கிறது. மனனம் செய்து ஒப்புவிக்கும் ஒருவரே கல்வியில் உயர்நிலையை அடையமுடியும். போட்டி போட்டுப் படிக்கின்ற நிலையை, அந்தப் போட்டியில் சிலர் வெல்ல ஏனையவர்கள் வெளிவீசப்படுகின்ற நிலையை, படித்த படிப்புக்கும் கிடைக்கும் வேலைக்கும் சம்பந்தமில்லாத நிலையை இந்த நாடகம் பேசுகிறது.

பாடசாலைப் படிப்புக்கு மேலாக ரியூசன் என்று பிள்ளைகளை வருத்துகின்ற, அவர்களில் அதிக சுமையை ஏற்றுகின்ற கல்விமுறையை, எமது மக்களின் மனப்பாங்கையெல்லாம் இந்த நாடகம் கேள்விக்கு உட்படுத்துகின்றது. இவையெல்லாம் அச்சொட்டாக இன்றும் பொருந்துகிறது. குழந்தை ம.சண்முகலிங்கத்தின் தீர்க்கதரிசனமான சிந்தனையை இந்த நாடகம் இன்றளவும் கடத்தி வந்துள்ளது என இந்த நாடகத்தைப் பார்த்தவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

நாடகத்தில் கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை மாணவிகளே முழுமையாக நடித்திருந்தனர். சொல்ல வந்த விடயத்தை கச்சிதமாக முன்வைத்திருந்தார்கள். அத்துடன் வழக்கமான இசைக்கருவிகளின் பயன்பாடு இல்லாமல் தடி, சப்பளாக்கட்டை, கிறிச்சான் முதலான எளிமையான கருவிகளைப் பயன்படுத்தி இந்த ஆற்றுகையை அவர்கள் செய்திருந்தமை சிறப்பானது. தேசிய கலை இலக்கியப் பேரவையில் நாற்சார் முற்றத்திலேயே ஆற்றுகை இடம்பெற்றது. சூழலுக்கேற்ப செயற்படக்கூடிய வகையில் தாமே பாடி ஆடி நடித்தமையும் சிறப்பானது.

இலங்கை அரசாங்கம் கல்வியில் புதிய சீர்திருத்தம் ஒன்றினை நடைமுறைப்படுத்த முனையும் இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நாடகமும் கல்வியில் மாற்றந் தேவை என வலியுறுத்துவது முக்கியமானது. பேராசிரியர் சி.ஜெய்சங்கர் சமூக மாற்றந் தொடர்பிலும், சூழலியல் தொடர்பிலும், பாரம்பரிய கலைகளின் மீளுருவாக்கம் தொடர்பிலும் தொடர்ந்து குரல் கொடுத்தும் செயலாற்றியும் வரும் ஒருவர். அவரது நெறியாள்கையில் கிழக்குப் பல்கலைக்கழக மாணவியர் 40 வருடங்கள் கடந்த ஒரு நாடகத்தை மீண்டும் மேடையேற்றியிருப்பதும், ஒரு சிந்தனைக் கிளறலைச் செய்திருப்பதும் முக்கியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர் தினம்: அன்றும் இன்றும் ஒன்றா...?






**யோகேஸ்வரன் ஜோவர்ணன்**
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இந்த உலகம் இன்று வரை சுழன்று கொண்டிருப்பதற்கு பல காரணிகள் இருப்பினும், அனைத்துக்கும் அடிப்படையாகத் திகழ்வது உழைப்பு எனலாம். உலகம் தோன்றியது முதல் அனைத்து ஜீவராசிகளும் உழைத்துக் கொண்டேயிருக்கின்றன. மனிதனின் உணவுச் சங்கிலியை போல் இன்றியமையாதது, மனித இனத்தின் உழைப்புச் சங்கிலி. பிறப்புக்கு உழைக்கும் மருத்துவர் தொடங்கி இறப்புக்கு உழைக்கும் இடுகாடு வரை, மனித இனத்தின் உழைப்பு ஒருவரை ஒருவர் சார்ந்து, ஒரு சங்கிலித் தொடராய் பின்னிப் பிணைந்துள்ளது. அந்த வகையில் மே முதலாம் திகதியான இன்று சர்வதேச தொழிலாளர் தினமாக அல்லது உழைப்பாளர் தினமாக அறியப்படுகின்றது.

**தொழிலாளர் தினம் ஆரம்பமானது எப்படி?**

1880களின் காலகட்டத்தில் உலகம் முழுவதும் 16 முதல் 18 மணிநேரங்கள் வரை தொழிலாளர்கள் கட்டாயப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். நல்ல உறக்கம், நல்ல உணவு, நல்ல உறைவிடம் என்பதெல்லாம் பணக்கார வர்க்கத்துக்கு மட்டுமே சொந்தமானவையாக இருந்தன. இதை எதிர்த்து தொழிற்புரட்சி ஏற்பட்ட நாடுகளில் போராட்டங்கள் வெடித்தன. அதில் முக்கியமானது மே 3, 4ஆம் திகதிகளில் அமெரிக்காவின் சிக்காக்கோவில் நடத்தப்பட்ட போராட்டம். இந்தப் போராட்டத்தில் பொலிஸார் காட்டுமிராண்டித்தனமாக தாக்குதலை நடத்தியதுடன், தொழிலாளர்களின் ஏழு தலைவர்கள் தூக்கிலடப்பட்டனர்.
தொடர்ந்து போராட்டங்கள் நடந்து வர 1889ஆம் ஆண்டு ஜுலை மாதம் 14ஆம் திகதி உலக தொழிலாளர்களின் சர்வதேச கூட்டம் பரிஸில் நடைபெற்றது. இதில் தொழிலாளர் வர்க்கத்தின் கடவுளாகப் பார்க்கப்படும் கார்ல் மார்க்ஸ் மற்றும் பிரெட்ரிக் ஏங்கல்ஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர். அந்தக் கூட்டத்தில்வைத்தே கார்ல் மார்க்ஸ் 8 மணி நேர வேலை, 8 மணி நேர உறக்கம், 8 மணி நேர ஓய்வு என்ற கோஷத்தை முன்வைத்து போராட்டங்களை முன்னெடுக்கவும், மே முதலாம் திகதியை உலக தொழிலாளர் தினமாக கொண்டாடவும் அறைகூவல் விடுத்தார். அதிலிருந்துதான் மே தினம் இந்தத் திகதியில் கொண்டாடப்பட்டு வருகிறது.
ஒவ்வொரு நாடுகளும் படிப்படியாக இந்தத் திகதியையே தொழிலாளர் தினமாக கொண்டாடவும் ஆரம்பித்தன.
இலங்கையில் தொழிலாளர் தினம் ஆரம்ப காலத்தில் மேலைத்தேய நாடுகளின் ஆதிக்கத்தினால் முதலாளித்துவக் கோட்பாடுகள் அதிகம் பின்பற்றப்பட்டாலும், தொழிலாளர் வர்க்கத்திற்கு சார்பான நிகழ்வுகள் பல நிகழ்ந்துள்ளன. இலங்கையின் முதலாவது மே தின ஊர்வலம், 1927ஆம் ஆண்டு தொழிற் சங்க தலைவரான ஏ.இ.குணசிங்க தலைமையில் நடைபெற்றது. இதில் ஆண்கள் மற்றும் பெண்கள் அதிகம் கலந்து கொண்டனர். இதைத் தொடர்ந்து 1956ஆம் ஆண்டு மே தினம் பொதுவிடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டது.
1891ஆம் ஆண்டு மே மாதம் 1ஆம் திகதி பிறந்த குணசிங்க, தொழிலாளர் வர்க்கத்துக்குப் பெரும் சேவைகளைச் செய்துள்ளார். இவரின் காலப்பகுதியிலேயே புகையிரத வேலைநிறுத்தம் மற்றும் துறைமுக வேலைநிறுத்தம் போன்ற வேலைநிறுத்தங்கள் நிகழ்ந்தன. அநேக வேலைநிறுத்தங்கள் தோல்வியில் முடிந்தாலும் ஆங்கிலேயருக்கு எதிராக முக்கியமான சில வேலைநிறுத்தங்களை வென்றுள்ளார் என்பதோடு, இவரே இலங்கையின் தொழிலாளர் இயக்கங்களின் தந்தையாக அறியப்படுகிறார்.



> **இலங்கையில்** ஆரம்ப காலத்தில் தொழிலாளர் வர்க்கத்தை மையமாகக் கொண்டே மே தின ஊர்வலங்கள் நடத்தப்பட்டாலும், தற்போதைய காலப்பகுதியில் அரசியல் செல்வாக்கினை காண்பிக்கும் மேடையாக தொழிலாளர் தினம் மாற்றம் பெற்றுள்ளது என்பதே உண்மையாகும்.

**இலங்கையில் தொழிலாளர் தொடர்பான சட்டங்கள்?**

தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் இலங்கையில் பல சட்டங்கள் காணப்படுகின்றன. 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டம், 1980ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டம், 1983ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டம், 1950ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க தொழிற் பிணக்குச் சட்டம், 1971ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க தொழிலாளர் பணி முடிவுறுத்தற் சட்டம் என்பன முக்கியமான சில சட்டங்களாகும். ஒரு தொழிலாளி தனக்கு இழைக்கப்படும் தீங்கு தொடர்பில் முறைப்பாடு செய்வதற்கும், தீர்ப்பினைப்பெறுவதற்கும் தொழில் நியாய சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**அனைத்து நாடுகளும் கொண்டாடுகின்றனவா?**

பெரும்பாலான நாடுகள் தொழிலாளர் தினத்தை மே மாதம் முதலாம் திகதியன்றே கொண்டாடுகின்றன. பல நாடுகளில் மே மாதம் முதலாம் திகதி தேசிய விடுமுறை தினமாகவும் உள்ளது. ஆனால் கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் செப்ரெம்பர் மாதத்தின் முதல் திங்கட்கிழமையில் தொழிலாளர் தினம் கொண்டாடப்படுகின்றது.
இலங்கையில் ஆரம்ப காலத்தில் தொழிலாளர் வர்க்கத்தை மையமாகக் கொண்டே மே தின ஊர்வலங்கள் நடத்தப்பட்டாலும், தற்போதைய காலப்பகுதியில் அரசியல் செல்வாக்கினை காண்பிக்கும் மேடையாக தொழிலாளர் தினம் மாற்றம் பெற்றுள்ளது என்பதே உண்மையாகும். தற்போதும்கூட பெரும்பான்மைக் கட்சிகள் தமக்கு மக்கள் செல்வாக்கையும், அரசியல் களத்தில் தமக்கிருக்கும் பலத்தையும் காண்பிக்கவே இன்றும் கொழும்பில் பெருமெடுப்பில் தொழிலாளர் தினத்தை நடத்துகின்றன. இது வேதனையளிக்கும் விடயம் மட்டுமல்லாது, தொழிலாளர் தினத்தின் மேன்மையையும் மகிமையையும் புரிந்துகொள்ளாத செயற்பாடுமாகும்.






புதன்பொய்கைக்கு நீங்களும் எழுதலாம்

- கட்டுரைகள்
- கவிதைகள்
- விமர்சனங்கள்
- நூல் அறிமுகம்
- பதிவுகள்
- அறிவியல்
- கலைப்படைப்புகள்

அனுப்பவேண்டிய முகவரி:
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுதவிழா நாயகனை பாராட்டி வாழ்த்துகின்றோம்




**ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர் வலயக்கல்வி அலுவலகம் முல்லைத்தீவு**

## கதிரமலை உருத்திரமூர்த்தி

ஆழமான அறிவும் கூர்மையான நிர்வாகத்திறனும் நிறைந்த இறைபக்தியும் தூர நோக்கும் கொண்ட உருத்திரமூர்த்தி ஐயா அவர்களின் அமுதவிழாக் கண்டு பெருமகிழ்வு அடைகின்றோம். இன்று போல் என்றும் உடல் உள ஆரோக்கியத்தோடு நூற்றாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
**கல்விச் சமூகம்**
**புதுக்குடியிருப்பு பிரதேசம்**

CR (42324) V-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 04 . 1948



மறைவு 30 . 04 . 2024

## பத்மாசலன் பரமேஸ்வரி

குப்பிழானைப் பிறப்பிடமாகவும், விளையாட்டரங்கு வீதி, கோப்பாய் தெற்கினை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மாசலன் பரமேஸ்வரி அவர்கள் நேற்று (30.04.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பத்மாசலனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு - தங்கம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் தங்கராசா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கமலாதேவி, இராஜகுலேந்திரன் மற்றும் சிவானந்தன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2024) புதன்கிழமை முற்பகல் 09.00 மணிக்கு இடம்பெற்று, குப்பிழான் காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**விளையாட்டரங்கு வீதி, கோப்பாய் தெற்கு.**
**077 004 6542**

**தகவல்:**
**சி.பத்மாசலன் (பாலு)**

(CS 00369) S-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 01 . 1939



மறைவு 30 . 04 . 2024

## வேல்முருகு கனகசபாபதி

(ஓய்வு பெற்ற தொழிநுட்ப உத்தியோகத்தர்)

பருத்தித்துறை ஆத்தியடியைப் பிறப்பிடமாகவும், புலோலி கிழக்கு, அரசடி ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட வேல்முருகு கனகசபாபதி அவர்கள் நேற்று (30.04.2024) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிராமகோட்டு நீதிபதி சங்கரப்பிள்ளை வேல்முருகு - சீதாதேவி தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான நுளம்பியல் நிபுணர் இராமசாமி மகாதேவா - பாலாம்பிகை தம்பதியரின் மருமகனும், திலகவதியின் பாசமிகு கணவரும், நரேந்திரன் (பொறியியலாளர், லண்டன்), கௌரி (கனடா), தர்ஷினி (சட்டத்தரணி, கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சறோஜினி (வைத்தியர், லண்டன்), சிவகுமார் (கனடா), ஸ்ரீகணேசராஜா (சட்டத்தரணி, கொழும்பு) ஆகியோரின் மாமனாரும், அபி (லண்டன்), செயூரன் (கனடா), சேயோன் (கனடா), செந்தாழன் (கனடா), சாருகேஷன் (கொழும்பு), சாம்பவி (கொழும்பு) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான ஆலாலசுந்தரம், மனோன்மணி, இந்திரா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற பகவதி மற்றும் விஜியறாணி (சட்டத்தரணி - பதில் நீதவான்), கலைமதி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2024) நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோரியடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**விஜியறாணி உருத்திரேஸ்வரன் (மைத்துனி)**
**சட்டத்தரணி 021 226 3630**
K.V.**ஸ்ரீகணேஷ ராஜா சட்டத்[illegible]**
**தர்ஷினி சட்[illegible]**

(CS 00374) S-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 06 . 1944



மறைவு 29 . 04 . 2024

## கந்தையா சிவநேசன் (அப்பு)

(ஓய்வுநிலை கணக்காளர்)

மலேசியாவை பிறப்பிடமாகவும் சுழிபுரம், கொழும்பு, தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவநேசன் (அப்பு) அவர்கள் கடந்த (29.04.2024) திங்கட்கிழமை தெல்லிப்பழையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவாஜினி மற்றும் பவநீதனின் பாசமிகு தந்தையும், உருத்திரகுமார், தர்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும், சீமோன், சுஜி, ஹர்ணிகா, அர்விதன் ஆகியோரின் பேரனும், அமரர் சிவானந்தன், அமரர், நாகேஷ்வரி, அமரர் தர்மலிங்கம், அமரர் புவனேஸ்வரி, அமரர் ராஜேஸ்வரி, வள்ளி நாயகி, அமரர் சிவதாசன், சிவஞானவதி, சிவயோகவதி, அமரர் லீலாவதி, சாந்திமணி, மனோஹரன், வீமதேவன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், அமரர் சிவசுப்பிரமணியம், அமரர் தாமோதரம்பிள்ளை, சரஸ்வதி, அமரர் சிவராசா, லிங்கேஸ்வரி, அமரர் கமலாதேவி, அம்பிகாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (02.05.2024) வியாழக்கிழமை மு.ப 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் திருவடிநிலை சுழிபுரம் இந்து மயானத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**மகன் பவநீதன் (பவன்)**
Sairam Construction - Jaffna, Bestcon (Pvt) Ltd-Colombo.

(CS 370) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொஞ்சக் காலமாவது உறவுகளுடன் வாழவிடுங்கள்

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நேற்றுப் போராட்டம்



யாழ்ப்பாணம், மே 1

**எங்கள் உறவுகளுடன் கொஞ்சக் காலமாவது வாழவிடுங்கள் என கிளிநொச்சியில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்திய காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவுகள் தெரிவித்தனர்.**

ஏ-9 வீதி கிளிநொச்சி ஆனந்தபுரத்திலுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்துக்கு முன்பாக நேற்று மு.ப.10.30 மணியிலிருந்து சுமார் அரை மணி நேரம் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. காணாமல் ஆக்கப்பட்ட தங்களின் உறவுகளின்படங்களையும் சுமந்தவாறு அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர். தமது போராட்டத்தை இலங்கை அரசாங்கம் தீர்த்து வைக்காத நிலையில் சர்வதேசத்தை நம்பியிருப்பதாக வலியுறுத்திய அவர்கள், பல ஆயிரக்கணக்கானோருடன் ஆரம்பித்த தங்களின் போராட்டம் இன்று சில நூறு பேருடன் சுருங்கி விட்டதாகவும் கவலை வெளியிட்டனர். பலர் தங்கள் உறவுகளைக் காணாமலேயே உயிரிழந்துவிட்டனர் எனவும் தெரிவித்தனர். (ஓ-113)


**THE ROYAL COLLEGE OF JAFFNA**

இலக்கணப் பிழையின்றி ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப்பயில

By. ந.விக்னேஸ்வரன் ஆச்சார்யார்

(Retired M.L.T) (M.L.S)

குபேரன் கட்டட மாடி, சங்கானை.

**077 675 1649**


## திருத்தம்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் 2024.04.30 ஆந் திகதிய உதயன் பத்திரிகையில் 10ம் பக்கத்தில் வெளியான கேள்வி அறிவித்தலில் கீழ்வரும் விடயங்கள் திருத்தம் செய்யப்படுகின்றது.

1. பந்தி 9இல் கேள்வி முன்கூட்டம் 2024.05.10ஆந் திகதி என்பதை 2024.05.07ஆந் திகதி எனவும்
2. வேலை விபர அட்டவணையில் "கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியிலிருந்து கேள்வி" என்பது "கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம்" எனவும், கேள்விப் பிணை
3. செல்லுபடியாகும் காலம் 2024.07.30ஆந் திகதி என்பதை 2024.08.14ஆந் திகதி எனவும் திருத்தி வாசிக்கவும்.

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,**
**புத்தூர்.**

2024.05.01

(cr.42323) (N-1)

## மீன்பிடிக்கச் சென்றவர் சடலமாக மீட்கப்பட்டார்

யாழ்ப்பாணம், மே 1

மீன்பிடிக்கச் சென்ற முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் புங்குடுதீவில் இடம்பெற்றுள்ளது. புங்குடுதீவு நான்காம் வட்டாரத்தைச் சேர்ந்த கதிரவேல் சுப்பிரமணியம் (வயது - 64) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-ம-25)


**பெண் வேலையாள் தேவை**

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் அமைந்துள்ள வீட்டிற்கு வீட்டு வேலைகளை செய்வதற்கு **பெண் வேலையாள் தேவை.**

(CS/28537) J-1

**077 502 6827, 074 251 7234**

**Belarus Job Visa**

ஐரோப்பிய நாட்டில் **Restorant** க்கு வேலை செய்வதற்கு **வேலையாட்கள் தேவை.**

(CS/28536) J-1

**076 262 5364, 070 621 3903**

**வேலையாட்கள் தேவை**

யாழில் உள்ள பிரபலமான வெதுப்பகம் ஒன்றிற்கு விற்பனை உதவியாளர் தேவை.
ஆண்கள் விரும்பத்தக்கது.
வேலை நேரம் - 5 am - 2 pm
- 1 pm - 9pm

No. 118, Rolex Bake Mart
Kasthuriyar Road, Jaffna.

(cs54876) (N-1)

**021 222 9402, 077 713 1594**


## மேதின ஒன்றுகூடல் நிகழ்வு

யாழ்., மே 1

கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் மேதின ஒன்றுகூடல் நிகழ்வு, உரும்பிராயில் அமைந்துள்ள கிராமிய உழைப்பாளர் சங்க அலுவலகத்தில் சங்கத் தலைவர் என். இன்பம் தலைமையில் இன்று புதன்கிழமை பி.ப.3.05 மணிக்கு நடைபெறவுள்ளது. (ப-66)

## மரண அறிவித்தல்



தோற்றம் 29 . 12 . 1929

இறப்பு 29 . 04 . 2024

**பொன்னையா நகுலாம்பிகை**

வேலணை கிழக்கு 3ம் வட்டாரம் முத்துமாரி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் பொன்னாலை மேற்கு, சுழிபுரத்தை வசிப்பிடமாகவும், கொண்ட பொன்னையா நகுலாம்பிகை அவர்கள் நேற்று முன்தினம் (29.04.2024) திங்கட்கிழமை பொன்னாலையில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னாலையூர் பொன்னையா மாஸ்ரரின் அன்பு மனைவியும், வேலணையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பொன்னாலை கிருஷ்ணன் கோயில் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் பொன்னாலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
077 340 0918
**இ.உமணகேனன் (பேரன்)**
**சிரேஸ்ட விரிவுரையாளர்,**
**யாழ். பல்கலைக் கழகம்.**

தகவல்:
[illegible] பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

(CS/28540) J-1

## மரண அறிவித்தல்



பிறப்பு 19 . 07 . 1933

இறப்பு 30 . 04 . 2024

**கனகசபை யதுகுலசிங் (SLEAS)**

(ஓய்வுபெற்ற ஆசிரிய கலாசாலை உடற்கல்வி விரிவுரையாளர் - நல்லூர், கொழும்புத்துறை, பலாலி கோப்பாய் ஆசிரிய கலாசாலைகள்)

யாழ்ப்பாணம், மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தை சேர்ந்த கனகசபை யதுகுலசிங் நேற்று (30.04.2024) செவ்வாய்க்கிழமை சிவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேற்பிள்ளை கனகசபை - விசாலாட்சி தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான முருகேசு சதாசிவம் - கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், லலிதாம்பிகை அவர்களின் பாசமிகு கணவரும், பரந்தாமன் (மேலதிக அரச அதிபர், மன்னார்), அநிருத்தனன் (பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரம்யா (முகாமையாளர், மக்கள் வங்கி - கன்னாதிட்டி), சியாமளா (ஆசிரியை - சைவமங்கையர் வித்தியாலயம், கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அக்ஷயன் (பரியோவான் கல்லூரி), கௌசல்யா (புனித பொஸ்கோ), பிரகதி, வர்ஷினி (சைவ மங்கையர் வித்தியாலயம், கொழும்பு) ஆகியோரின் பேரனும், ஞானாம்பிகை, நமசிவாயம், சதாசிவம், தனஞ்செயன், பஞ்சாட்சரம், சாரதாம்பிகை, அம்பிகாபதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற சோமசுந்தரம் அவர்களின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2024) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் யாழ். கந்தர்மடம், 186, பலாலி வீதியில் உள்ள இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்டைதீவு இந்து மயானத்திற்கு மாலை எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


070 659 9078
071 440 2317

தகவல்:
**குடும்பத்தினர்**

(CS28539) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 18.03.2024 திங்கட்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் தம்பு தம்பிராசா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (01.05.2024) புதன்கிழமை காலை 8.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 03.05.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(cr. 42322) (N-1)

**குடும்பத்தினர்**

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை : பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்
விண்ணப்பதாரரின் பெயர் : வர்ணகுலசூரிய பற்றிக் பெர்ணாண்டோ
சபை ஆதனவரி பதிவேட்டின்படி பெயர் : S.M.செல்வராசா
ஆதன இல: 162/4
முகவரி: சில்லாலை டச்சுறோட், வட்டாரம் 02

வட்டாரம் 02, சில்லாலை டச்சு வீதியில் அமைந்துள்ள உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை பண்டத்தரிப்பு கோவில்பற்று பண்டத்தரிப்பு இறை "பொன்னாடை எனும் பெயருள்ள நிலப்பரப்பு 02 குளி 15.80 விஸ்தீரணமுள்ள இவ்வாதனம் பண்டத்தரிப்பு சில்லாலை வடக்கைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ரட்ணம் அருள் கென்றி அலோசியஸ், பெண் லெற்றிசியா என்பவர்களுக்கு பிரசித்த நொத்தாரிசு அற்புதராஜ் முகதாவில் 27.07.2013ம் திகதி நிறைவேற்றப்பட்ட 561ம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி மூலம் கிடைக்கப்பெற்று 12.08.2019ம் திகதிய 1215ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் வர்ணகுலசூரிய பற்றிக் பெர்ணாண்டோ என்பவருக்கு வந்தடைந்துள்ளது.

ஆதன விபரம்


நில அளவையாளர் அ.சந்தியாப்பிள்ளை அவர்களால் வரையப்பட்ட 2450ம் இலக்க 2013.07.26ம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் லொட் 01 எனச் சுட்டப்பட்ட நிலப்பரப்பு 02 குளி 15.8 கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு
வடக்கு, மேற்கு - தமியாம்பிள்ளை அன்ரனதும் பெண் மேரி றெஜினாவினதும் ஆதனம் கிழக்கு - ஒழுங்கை
தெற்கு - ஒழுங்கையும் பொதுக்கிணறும் துர்வையும் குறித்த பொதுக்கிணற்றில் பங்கும் வழமையான வழிவாய்க்காற் பாவிப்புரித்தும்

மேற்குறித்த ஆதனத்தை வர்ணகுலசூரிய பற்றிக் பெர்ணாண்டோ என்ற பெயரில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்களூடாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத பட்சத்தில் விண்ணப்பதாரரின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.** (cs 54875) (N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 07 . 1947



மறைவு 29 . 04 . 2024

### கந்தையா செல்வரத்தினம்

முன்னாள் Forman (Saudi Cement Company, Puttalam Cement Company)

உசனை பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தை, உசனை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா செல்வரத்தினம் 29.04.2024 திங்கட்கிழமை உசனில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - செல்லம்மா தம்பதியரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற நல்லதம்பி - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், தவமணி (ஓய்வுபெற்ற முகாமைத்துவ உதவியாளர், கொழும்பு) அன்புக் கணவரும், துஷிதா (Accountant - கொழும்பு), மயூரன் (Engineer Canada), நிருஷியா (Architect technology YMGT) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரதீபன் (Manager Engineering EAM Maliban Textile) ஜெஸ்மின் (கனடா), பிரசாந்த் (Director technology EYGDS) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜீவகாஷ், சஷ்மிதா, மிருன், ஜெருன், ஜோமியா, மகதி, கிருத்திகேஷ் ஆகியோரின் அன்புத் தாத்தாவும், நவரத்தினம், செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகேஷ்வரி, காலஞ்சென்ற சுந்தரலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.05.2024) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் (உசன்) காலை 8.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.30 மணியளவில் உசன் ஈச்சங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**


| | | |
|---|---|---|
| மகள் | : துஷிதா | - 077 461 0598 |
| | நிருஷியா | - 077 909 4939 |
| மருமகன் | : பிரதீபன் | - 070 354 1889 |
| | பிரசாந்த் | - 077 283 0899 |

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS00211) N-1

## 31ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம் 07 . 11 . 1938



மறைவு 02 . 04 . 2024

### அமரர் கணபதிப்பிள்ளை துரைராசா

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்

அன்னாரது அந்தியேட்டி சபிண்டீகரண நிகழ்வுகள் 02.05.2024 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் காலை 10.00 மணியளவில் நடைபெறும். அந்நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அம்மன் கோவிலடி,**
**[illegible] தெற்கு,**
**கரவெட்டி.**

**நீங்கா நினைவுகளுடன்..**
**குடும்பத்தினர்**

(CR/42320) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 02 . 05 . 1959

மறைவு 01 . 04 . 2024

கடந்த 01.04.2024 ஆம் திகதியன்று இறைவனடி சேர்ந்த எனது அன்பு மனைவி

### அமரர் திருமதி குகராசா மனோகரதேவி

அவர்களின் அந்தியேட்டி நிகழ்வுகள் 29.04.2024 திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம் பெற்றதுடன்

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று 01.05.2024 புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று எதிர்வரும் 02.05.2024 வியாழக்கிழமை அன்று கொக்குவில் மேற்கு மணியர்பதி வீதியில் அமைந்துள்ள மணியர்பதி மண்டபத்தில் முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறும் அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையில் தங்கள் குடும்பசகிதம் கலந்து கொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் பங்கு கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிவகுரு வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

க.குகராசா (கணவர்)
மற்றும் வசிகரன் (சகோதரன்)

(CS/373) V-1


# யாழ். பல்கலையில் மே தின ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், மே 1

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் மேதின ஒன்றுகூடலும், பல்கலைக்கழக சேவையிலிருந்து ஓய்வுபெற்ற ஊழியருக்கான சங்க மீள் அங்குரார்ப்பணமும் இன்று புதன் கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஊழியர் பொது அறையில் இடம்பெறவுள்ளது.

மேதின நிகழ்விலும், அதனைத் தொடர்ந்து மீள ஆரம்பிக்கப்படவுள்ள பல்கலைக்கழகச் சேவையில் ஓய்வுபெற்ற ஊழியருக்கான சங்க மீள் அங்குராப்பண நிகழ்விலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் ஓய்வு பெற்ற பல்கலைக்கழக ஊழியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ம-66)


**வீட்டுப் பணிப்பெண் தேவை**

யாழ் திருநெல்வேலியில் உள்ள வீடு ஒன்றில் வீட்டு வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.

**077 191 9859**

**வேலையாள் தேவை**

பூங்கன்று விற்பனை நிலையத்திற்கு தங்கி நின்று வேலை செய்வதற்கு 45 வயதிற்கு உட்பட்ட ஆண் தேவை.

**075 944 4601**

**யாழ்நகரில் உள்ள பிரபல நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை (பெண்கள் மட்டும்)**

எமது நிறுவனத்தில் பின்வரும் வேலைகளுக்கு முன் அனுபவம் உள்ள அல்லது கேக், ஐசிங் துறையில் பயிற்சி நெறியினை பூர்த்தி செய்து சான்றிதழ் உள்ளவர்கள் தேவைப்படுகின்றனர்.

(பகுதி அல்லது முழுநேரம்)

- Baking - பேக்கிங்
- Icing - Butter Cream Icing
- Fondant - (ஐசிங் - பட்டர் கிறீம் ஐசிங், பொண்டன்ட் ஐசிங்)

தொடர்புகளுக்கு: **075 831 4183**

## மரண அறிவித்தல்



**மாணிக்கம் நடராஜா**

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது நல்லூரில் வசித்தவருமான மாணிக்கம் நடராஜா 30.04.2024 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - சின்னம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சிவக்கொழுந்து (ஓய்வு நிலை ஆசிரியை) அவர்களின் அருமைக் கணவரும், காலஞ்சென்ற கோமதி (கணித ஆசிரியை) அவர்களின் அன்புத் தந்தையும், ச.குகதாஸ் (பிரதிப் பிரதம செயலாளர் - நிதி) அவர்களின் மாமனாரும், சரண்யா, சாருஜன், தாரங்கா ஆகியோரின் அருமைப் பேரனும், காலஞ்சென்றவர்களான அன்னபூரணம், ஏரம்பமூர்த்தி, பாலசுப்பிரமணியம் மற்றும் புவனேஸ்வரி, கமலாதேவி, இந்திராணி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2024) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் நல்லூரில் உள்ள அவரது மகளின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச.குகதாஸ்
077 744 8173

24, செட்டித்தெரு,
நல்லூர்.

(CS/54883) J-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 27 . 07 . 1962



இறப்பு 29 . 04 . 2024

**இராஜநாயகம் சிவகுமார் (பவுண்)**

கல்லூரி ஒழுங்கை, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட இராஜநாயகம் சிவகுமார் (பவுண்) அவர்கள் 29.04.2024 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசிரியர் சுப்பையா இராஜநாயகம் - பரமேஸ்வரி இராஜநாயகம் (மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர்) தம்பதியரின் செல்வப் புதல்வனும், கீதா (இங்கிலாந்து) அவர்களின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.05.2024) வியாழக் கிழமை காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :-
076 888 5205
0044 793 031 2258 - UK

தகவல்:
சகோதரி - கீதா

(CS/54886) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 01.04.2024 திங்கட்கிழமை
சிவபதம் அடைந்த
எமது குடும்பத்தலைவி

## சண்முகம் விஜயலட்சுமி

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (01.05.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனை தனிப்பிட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

மேலும் அன்னாரின் மரணச் செய்தியறிந்தவுடன் நேரிலும் தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் தெரிவித்த உள்நாட்டு, வெளி நாட்டு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும், பதாகைகள், மலர்வளையங்கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் அன்னாரின் இறுதிக் கிரியையில் கலந்துகொண்டவர்களுக்கும், இன்று வரை எமக்கு பல வழிகளில் உதவிபுரிந்த நல்லுள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தோற்றம் 17.12.1948


மறைவு 01.04.2024

மணற்காடு,
காரைநகர்.

குடும்பத்தினர்
077 351 8067

---

## மரண அறிவித்தல்



தோற்றம் 16 . 01 . 1936

மறைவு 28 . 04 . 2024

### சிவலிங்கம் இரத்தினமணி (கற்கண்டு)

அராலி மத்தி வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கம் இரத்தினமணி 28.04.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்து - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சிவலிங்கத்தின் (Railway Station master) அன்பு மனைவியும், மோகன், சாந்தினி, சரோஷினி, குமுதினி, அசோகன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயபாலன், அகிலன், நவரட்ணம், றாஜீ, கமலகுமாரி ஆகியோரின் மாமியாரும், இந்தி ராணியின் (பேபி) சிறிய தாயாரும், காலஞ்சென்றவர்களான சிவபாக்யம், தம்பிராசா, தங்கராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (01.05.2024) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூனாவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.

தகவல்:
ராகுலன்
(RA Creation)
076 325 2686

(CS/54870) J-1

---

## மரண அறிவித்தல்



மலர்வு 11 . 08 . 1934

உதிர்வு 28 . 04 . 2024

அல்வாய் கிழக்கைச் சேர்ந்தவரும், தற்போது கொழும்பில் வசித்து வந்தவருமானஓய்வுபெற்ற ஆசிரியரான (யா/ அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்)

### மாணிக்கம் வைத்தியலிங்கம்

அவர்கள் 28.04.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பவளம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற ஏரம்பு வைத்தியலிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும், கலாவதி (கொழும்பு), சாந்தி (கனடா), நிலாமதி (கனடா), ஸ்ரீகாந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆறுமுகம் கந்தசாமி அவர்களின் பாசமிகு மாமியும், பிரவீன், நவீன் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், இராஜலிங்கம் (சிங்கப்பூர்), காலஞ்சென்ற சரவணமுத்து, மற்றும் செல்வரட்ணம் (கலிபோனியா), ஜீவரட்ணம் (கொழும்பு), பாக்கியலஷ்மி (அல்வாய் கிழக்கு), மகேஷ்வரி (கொழும்பு) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.04.2024 திங்கட்கிழமை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று, தகனக் கிரியைகள் கல்கிசை இந்து மயானத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சொய்சாபுர,
மொறட்டுவ.

தகவல்:
குடும்பத்தினர்

(CR/42319) J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.05. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org